# இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்

## 19வது மாநாடு

# பொதுச் செயலாளர் அறிக்கை

*1970 டிசம்பர் 17ந் திகதி முதல் 20ந் திகதிவரை*

**புதிய நகர மண்டபம், கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Progressive Printers &
Publishers
No: 9
De Mel St.
Col. 2.

TRANSFERRED FROM CEYLON ROOM
ON 16/06/2009

PERMANENT REFERENCE
FOR USE IN THE
LIBRARY ONLY

317472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TRANSFERRED FROM CEYLON ROOM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Iankai Tolilcankka Cammelanam

# இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்

# 19வது மாநாடு

## பொதுச் செயலாளர் அறிக்கை

**1970 டிசம்பர் 17ந் திகதி முதல் 20ந் திகதி வரை:**
**புதிய நகர மண்டபம், கொழும்பு.**

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் 19வது மகாநாடு, சர்வதேசரீதியாக தொழிலாளர் வர்க்கமும், புரட்சிகர இயக்கமும் ஓர் உன்னத நிலையில் இருக்கும் இந்தக் காலகட்டத்திலும், உலகம் முழுவதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கும் காலகட்டத்திலும் நடைபெறுகிறது.

வெல்லற்கரிய மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனை வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. எமது காலத்தின் மிகவும் முன்னேறிய இத் தத்துவத்தினுல் வழிகாட்டப்படும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களும், ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் உள்ள புரட்சிகர சக்திகளும், அமெரிக்காவினுல் தலைமை தாங்கப்படும் உலக ஏகாதிபத்தியத்திற்கும், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் மற்றும் எல்லா விதமான நவீன திரிபுவாதத்திற்கும், பிற்போக்குவாதத்திற்கும் மரண அடி கொடுக்கிறுர்கள். உலக மக்கள் எல்லோரையும் ஐக்கியப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களின் ஏவல் நாய்களையும் முறியடிக்கும்படி விடுத்த மே 20ம் திகதிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அழைப்பில் தோழர் மாசேதுங் சுட்டிக்காட்டியபடி "ஒரு **புதிய உலக யுத்தத்தின் அபாயம் இன்**

317472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் இருக்கிறபடியால் எல்லா தேச மக்களும் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் தற்பொழுது உலகின் நோக்கு புரட்சியேயாகும்.''

## அமெரிக்க ஏகாதிபத்தியம் தனிமைப்படுகிறது

வீரமிக்க வியட்நாமிய, லாவோஸிய மக்களை அடிமைப்படுத்தும் முயற்சியில் தோல்விகண்டு, அதனால் பரந்த முக்கிய பகுதிகள் கொண்ட அமெரிக்க மக்களை உட்படுத்திய முழு உலகத்தின் கண்டனத்திற்கும் ஆளாகிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், நொறடம் சிஹானுக்கின் ஆட்சிக்கெதிராக கம்போடியாவில் ஒரு ராணுவச் சதியை உருவாக்கி தமது ஆக்கிரமிப்புப் போரை அந்த நாட்டிற்குள்ளும் துரோகத்தனமாக விஸ்தரித்தார்கள். ஆனால், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு இது கைகொடுத்து உதவவில்லை. இந்தக் கள்ளத்தனமான ஆத்திரமூட்டும் ஆக்கிரமிப்புச் செயலானது உலகம் முழுவதும் கண்டனக் குரலைக் கிளப்பியதோடு மட்டுமின்றி இந்தோ - சீனத்தின் மூன்று தேச மக்களை ஒற்றுமைப்படுத்தியும் உள்ளது. இந்தோ சீனத்தின் மூன்று தேச தலைவர்களும் கூடிய உச்சி மகாநாட்டில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் பொம்மைகளுக்கும் எதிராக இறுதி வெற்றியை வெல்லும்வரை ஒன்றுபட்டு மக்கள் யுத்த முறையில் ஒருவருக்கு ஒருவர் உதவுவது என தீர்மானிக்கப்பட்டது.

கம்போடிய ஆக்கிரமிப்பில் தோல்விகண்ட அமெரிக்க ஏகாதிபத்திய கொலையாளி நிக்ஸன், வட வியட்நாம்மீது குண்டுவீசும் வேலையைத் திரும்பத் தொடங்கியதன் மூலம் உலக மக்களிடமிருந்து தன்னை மேலும் தனிமைப்படுத்திக் கொள்கிறான்: இதற்கிடையில், வியட்நாம் யுத்தத்தைத் தீர்ப்பதற்கெனக் கூறிக் கொள்ளப்படும், ஆனால், உண்மையில் உறுதிமிக்க வியட்நாம் மக்களின் நலன்களை விற்பதற்கென அமெரிக்க ஏகாதிபத்தியத்தினாலும், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தினாலும் கூட்டாகக் கூட்டப்பட்ட பாரிஸ் சமாதான மகாநாடு தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக முன்னேற்றமின்றித் தடைப்பட்டுள்ளது. அதன் காரணம் வியட்நாம் பிரச்சினைக்கு எந்தவித சமாதான தீர்வுகளும் இருக்க முடியாது என்பதே. இதன் தீர்வு வியட்நாம் போர்க்களங்களிலும், இந்தோ சீனத்திலிருந்தும், ஆசியாவிலிருந்தும் மனித வர்க்கம் வெறுக்கும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை கூண்டோடு விரட்டி அடிப்பதிலுமே தங்கியிருக்கிறது; பாரிஸ் சமாதான மேசையில் அல்ல என்பதே. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உறுதியுடன் போராடும் வெளிதேசத்திலமைந்த சிஹானுக்கின் அரசாங்கத்தை சோவியத் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியவாதிகள் இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பது கவனிக்கவேண்டிய ஒரு விஷயமாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பு எண்ணங்களைப் பற்றி அதிகமாகப் பேசும் திருமதி பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி அரசாங்கமும், சிஹானுக்கின் அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுக்கும் விஷயத்தில் சோவியத் அரசாங்கத்தின் கொள்கையைப் பின்பற்றியிருப்பது இன்னும் கவனிக்கத்தக்க ஒரு விஷயமாகும். அதேபோல, நவீன திரிபுவாதிகளும் அவர்கள் பாதையில் பிரயாணம் செய்பவர்களும் தங்களின் உண்மை சொரூபத்தை செயல் முறையில் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

## விடுதலை இயக்கங்களும் புரட்சிகரப் போராட்டங்களும் அபிவிருத்தியடைகின்றன

வெள்ளை மக்களையும், கறுத்த மக்களையும் கொலை செய்யும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சொந்த நாட்டிலேயே புரட்சித் தீ தீவிரமாகப் பரவத் தொடங்கியிருக்கிறது. அநேகமாகத் தென் கிழக்கு ஆசியாவிலிருக்கும் எல்லா நாடுகளும் புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதையை எடுத்துள்ளன. கொரிய, ஜப்பானிய மற்றும் ஆசிய தேசங்களினதும் மக்கள், அமெரிக்க ஜப்பானிய பிற்போக்குவாதிகளின் ஜப்பானிய ராணுவவாத புனருத்தாரணத்திற்கு எதிராகப் போராடுகிறார்கள்.

பாலஸ்தீன் மக்களினதும் மற்றும் அராபிய மக்களினதும், அமெரிக்காவினாலும் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளினாலும் உலக சியோனிஸத்தினாலும் ஆதரவு கொடுக்கப்படும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டமும், பாலஸ்தீன் விடுதலைக்கான போராட்டமும் இன்னும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் கூட்டுறவுடன் செயல்படும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின், பாலஸ்தீன் மற்றும் அராபிய மக்களின் புரட்சித் தீயை அணைக்கும் கடைகெட்ட அமெரிக்க சமாதானத் திட்டமானது அல்பத்தாஹ்வினால் தலைமைதாங்கப்படும் மற்றைய எதிர்ப்பு இயக்கங்களை அடக்கிய முழு பாலஸ்தீன் மக்களின் எதிர்ப்புக்கிடையில் தோல்விகண்டுள்ளது.

அதேபோல, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் தேசிய விடுதலை இயக்கங்களும் வட அமெரிக்கா, ஐரோப்பா, ஓஸியானியா மக்களின் புரட்சிகரப் போராட்டங்களும் பலமாக விருத்தியடைந்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராடும் மக்களுக்கு சி. டி. யு. எப். உறுதியான ஆதரவு

இலங்கை தொழிற் சங்க சம்மேளனமும் அதனுடன் இணைந்த தொழிற்சங்கங்களும் அவற்றின் சக அங்கத்தவர்களும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் பாதந்தாங்கிகளுக்கும் எதிரான போராட்டத்திலும், தேசிய விடுதலைக்கு ஆதரவான போராட்டத்திலும் எல்லாக் கண்டங்களிலும் ஈடுபட்டுள்ள எல்லா மக்களையும் மனப்பூர்வமாகவும் உறுதியாகவும் ஆதரிக்கிறார்கள். பொது விரோதிக்கெதிராகப் போராடும் எல்லா மக்களும் ஒருவரை ஒருவர் ஆதரித்து, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்று, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவல் நாய்களுக்கும் எதிராக சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்கவேண்டும் என்பது ஓர் முக்கியமான விஷயமாகும். இப்படிச் செய்வதன் மூலம் தான் நாம் உலக ஏகாதிபத்தியத்தைக் குழிதோண்டிப் புதைத்து அதன் புதை குழிமேல் நவீன நாகரிகத்தை அமைக்கும் மாபெரும் வேலையை நிறைவேற்ற முடியும்.

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அச்சம்

அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் நண்பர்களும் தங்களின் மிக உயர் பலத்தினால் எம்மைப் பயமுறுத்துவதை நாம் என்றும் அனுமதிக்கவே கூடாது. ''ஏகாதிபத்தியவாதிகளும், எல்லாப் பிற்போக்குவாதிகளும் கடதாசிப் புலிகளே! பார்வைக்குப் பிற்போக்குவாதிகள் பயங்கரமானவர்கள், ஆனால், உண்மையில் அவர்கள் அவ்வளவு சக்திவாய்ந்தவர்கள் அல்ல. நீண்டகாலக் கண்ணோட்டத்தில், உண்மையில் சக்திமிக்கவர்கள் பிற்போக்குவாதிகள் அல்ல, மக்களே'' என்ற தோழர் மாசேதுங்கின் போதனையை நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். முன்பு நாம் குறிப்பிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தோழர் மாசேதுங்கின் மே 20ம் திகதி அறிக்கையை ஆய்வதில் நாம் அக்கறை காட்டவேண்டும். அதில் அவர் கூறுகிறார்: ''பெரும் ராட்சதன் போல் தோற்றமளிக்கும், மரணப் போராட்டத்தின் விளிம்பில் நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் உண்மையில் ஒரு காகிதப் புலியே. இன்றைய உலகில் யார் யாரைக் கண்டுப் பயப்படுகிறார்கள்? அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குப் பயப்படுபவர்கள் வியட்நாம் மக்களோ, லாவோஸ் மக்களோ, கம்போடியா மக்களோ, பாலஸ்தீன் மக்களோ, அராபிய மக்களோ அல்லது மற்றத் தேசங்களின் மக்களோ அல்ல. அதற்கு மாறாக அமெரிக்க ஏகாதிபத்தியமே உலக மக்களுக்கு பயப்படுகின்றது. காற்றில் இலைகள் சலசலக்கும் ஓசையிலேயே அது உதறல் கொள்ளத் தொடங்குகிறது. நியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமான ஒரு விஷயத்திற்கு அமோக ஆதரவும் அதே நேரத்தில் நியாயமற்ற ஒரு விஷயத்திற்கு குறைந்த ஆதரவும் கிடைக்கின்றது என்பதை எண்ணற்கரிய உண்மைகள் நிரூபித்திருக்கின்றன. ஒரு பலமற்ற தேசம், ஒரு பலமான தேசத்தையும், ஒரு சிறிய நாடு ஒரு பெரிய நாட்டையும் தோற்கடிக்க முடியும். ஒரு சிறிய தேசத்து மக்கள் கிளர்ந்தெழுந்து போராடத் தயாரானல், கைகளில் ஆயுதம் ஏந்தி தமது கரங்களினாலேயே தம் தேசத்து விதியை நிர்ணயிக்கத் தயாரானல் அவர்கள் எந்தப் பெரிய தேசத்தின் ஆக்கிரமிப்பையும் முறியடிக்க முடியும். இது சரித்திரம் வகுக்கும் ஒரு சட்டமாகும்.

## மகத்தான சகாப்தம்

மிகச் சமீப காலத்தில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்குப் பலியான தேசம் கினி குடியரசாகும். அங்கு 1970 நவம்பர் 22ம் திகதியன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் போர்த்துக்கீஸ் காலனியாதிக்கவாதிகள் கூலிப்படைகளின் துணைகொண்டு திடீரென ஆக்கிரமிப்பில் ஈடுபட்டார்கள். ஜனதிபதி செகு தோரேயின் தலைமையில், கேடுகெட்ட இத் தாக்குதலை எதிர்த்து வெற்றி கண்டுள்ள வீரமிக்க கினி தேசத்து மக்களை நாம் கௌரவித்து சிரம் தாழ்த்துகின்றோம். அதேபோல, கினி (பிஸ்ஸோ), அங்கோலா, மொஸாம்பிக், தென் றொடீஷியா, தென் ஆபிரிக்கா போன்ற தேசங்களில் நடைபெறும், ஆபிரிக்க தேசிய விடுதலை இயக்கங்களின் பக்கம் எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதுபோல, இன வேற்றுமைக்கும், அடக்குமுறைக்கும் எதிராகப் போராடும் ஆபிரிக்க - அமெரிக்க சகோதரர்களின் பக்கம் நின்று எமது உறுதியான ஆதரவைத் தெரிவிக்கிறோம்.

சமாதானத்திற்கும், தேசிய விடுதலைக்கும், ஜனநாயகத்திற்கும், சோஷலிஸத்திற்குமான உலகம் முழுவதிலும்உள்ள மக்களின் போராட்டம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு உள் உறவுள்ளதாகத் திகழ்கின்றது. அவர்கள் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்று ஒருவரை ஒருவர் ஆதரித்தால்தான் அவர்களின் கூட்டு முயற்சியின் மூலம் உலக ஏகாதிபத்தியத்தினதும், நவீன திரிபுவாதத்தினதும் ஆட்டங்கண்ட அமைப்பைத் தரைமட்டமாக்க முடியும். மாசே துங் சிந்தனையின் சகாப்தத்தில் உலகப் புரட்சியினதும், உலக சோஷலிஸத்தினதும் வெற்றியின் சகாப்தத்தில் நாம் இப்பொழுது இருக்கிறோம் என்பதை நினைவு கூருவோமாக. ''ஏகாதிபத்தியம் முற்றான தகர்வை நோக்கி நகர, சோஷலிஸம் உலகம் பரந்த வெற்றியை நோக்கி முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிக் கொண்டிருக்கும் காலகட்டம் எமது சகாப்தமாகும். இது உலகம் முழுவதும் மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனை வெற்றிநடைபோடும் மாபெரும் சகாப்தமாகும். மகத்தான தலைவர் தோழர் மாஓவை நெருக்கமாகப் பின்பற்றி புதிய மகத்தான வெற்றிகளை வெல்வதற்கு உறுதியுடன் முன்னேறுவோமாக.

## திரிபுவாதிகளின் துரோக வேலைகள்

சோவியத் யூனியன், சோவியத் சமூக ஏகாதிபத்தியமாக மாறியது போன்ற எல்லா ரக நவீன திரிபுவாதத்திற்கும் எதிரான போராட்டத்தை ஒரே நேரத்தில் முன்னெடுத்துச் செல்லாவிட்டால், ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை இங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம். இது, தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் பூர்ஷுவாக்களின் செல்வாக்கையே திரிபுவாதம் குறிக்கிறது என்று லெனின் சுட்டிக்காட்டியதற்கு ஆதர்ஷமாக விளங்குகின்றது. எனவே, திரிபுவாதிகள் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் ஊடுருவல் செய்துள்ள ஏகாதிபத்தியத்தினதும், பூர்ஷுவாக்களினதும் ஏஜண்டுகளேயாவர்.

இந்த உண்மை, சோவியத் யூனியனில் அரசு அதிகாரத்தை துரோகி குருஷ்சேவ் அபகரித்து, முன்பிருந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எல்லா மக்களினதும் சர்வாதிகாரம் என்ற பொய் சுலோகத்தின் கீழ் பூர்ஷுவா சர்வாதிகாரமாக மாற்றியதிலிருந்தும், கைத்தொழிலிலும் விவசாயத்திலும் பரந்த ரீதியில் முதலாளித்துவத்தை புகுத்தியதிலிருந்தும் மிகவும் துலாம்பரமாக விளங்குகின்றன. கைத்தொழில் லாப ஊக்கம், கூட்டுப்பண்ணையாளர்களின் தனிப்பட்ட நிலவரம்பில் அதிகரிப்பு, சோவியத் தொழில், நிலம், ஆக்க சக்தி ஆகியவற்றைச் சுரண்டுவதற்கு வெளிநாட்டு ஏகாதிபத்திய ஏகபோகத்திற்கு அனுமதி கொடுத்தது போன்ற விஷயங்களிலும் இது பிரதிபலிக்கின்றது.

சோவியத் யூனியனின் வெளிநாட்டுக்கொள்கையில் உள்நாட்டில் முதலாளித்துவத்தைத் திரும்பவும் புகுத்திய உண்மை பிரதிபலிக்கின்றது. சோவியத் திரிபுவாத சமூக ஏகாதிபத்தியவாதிகள், பெரும் வல்லரசு சக்திகள் எனப்படுவனவற்றின் உலக ஆதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்கு உலகைக் கூறுபோடும் வீண் பிரயத்தனத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வேளையில், அதனுடன் போட்டியும் போடுகின்றார்கள். இந்த இலக்கை அடைவதை நோக்காகக் கொண்டு, கொங்கோ வில் நடந்ததுபோல் தேசிய விடுதலைக்கான எல்லா இயக்கங்களை காட்டிக்கொடுத்ததோடு வியட்நாமிலும், மத்திய கிழக்கிலும் செய்ததுபோல் தேசிய விடுதலைத் தீயை அணைப்பதற்கும் முயற்சி செய்கின்றார்கள். பிற்போக்குவாத கம்யூனிஸ எதிர்ப்பு ஆட்சி களான பாஸிஸ்ட் இந்தோனேஷியா, மலேசியாவின் பொம்மை ஆட்சி, ராணுவவாத ஜப்பான், விஸ்தரிப்புக் கொள்கையுடைய இந்தியா ஆகிய நாடுகளுடன் ராஜதந்திரத் தொடர்புகள் உட்பட சுமுகமான உறவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அமெரிக்க ஏழா வது கடற்படையின் தயவில் உயிர் வாழும் சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தின் ஆட்சியுடன் வெட்கமற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்துள்ளார்கள்.

மேலும், இவர்கள் அடிக்கடி சீன எதிர்ப்புப் பிரச்சார வேலை களில் ஈடுபட்டுள்ளதோடு மக்கள் சீனக் குடியரசுக்கெதிராக அதன் எல்லைப் புறங்களில் விசேஷமாக சென்பாஓ தீவில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதோடு, அமெ ரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகக் கொள்கைகளான ராணுவ தளங் களினால் சீனாவைச் சுற்றி வளைத்தலிலும் பங்கு கொள்கிறார்கள். ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகஜீவனம் என்று போதனை செய்யும் அதேவேளையில், இவர்களால் சோஷலிஸ அல்பேனியா வுடன் ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தக்கூட முடியாமல் இருக் கின்றது. பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மீதும், மங்கோலிய மக்கள் குடியரசு மீதும் தனது கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்தி யுள்ளதோடு சுரண்டலிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

## சமூக ஏகாதிபத்தியம்

1968, ஆகஸ்ட் மாதம் நடத்திய செக்கோஸ்லவாக்கிய ஆக் கிரமிப்புடன், ஒரு புதிய சூழ்நிலையை அடைந்திருந்த சோவியத் நவீன திரிபுவாதம், சமூக ஏகாதிபத்தியமாக மாறுவ தில் பூரணத்துவமும் பெற்றுள்ளது. ''வரையறுக்கப்பட்ட சுயாதிபத்தியம்'', ''சர்வதேச சர்வாதிகாரம்'' ''சோஷலிஸ குடும்பம்'' போன்ற பல தத்துவங்கள் மூலம் சுயதம்பட்டம் அடித்து தனது ஆக்கிரமிப்பையும், அநியா யத்தையும் மூடி மறைக்க சோவியத் திரிபுவாதத் துரோகி கள் என்னதான் முயற்சிகள் செய்தாலும் அவர்களால் எவரையும் ஏமாற்ற முடியாது. இவைகள் என்ன என்பதை—பழைய ஜார் மன்னர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதற்கு கிரெம்ளினின் புதிய ஜார்களின் முயற்சியை-மக்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அதேநேரத்தில் ரஷ்ய படையெடுப்பினால் செக் கோஸ்லவாக்கியாவில் சோஷலிஸம் அழிக்கப்பட்டுவிட்டது என்ற ட்ரொட்ஸ்கிய வாதிகளினதும், சில நவீன திரிபுவாதிகளினதும் எண்ணத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், செக் கோஸ்லவாக்கியாவில் முன்பு சோஷலிஸம் இருந்திருந்தால் தானே அதை இழந்திருக்கமுடியும். சோவியத் யூனியனில் நடைபெற்றது போல இந்நாடும் திரிபுவாதப் பாதையில் சென்று முதலாளித்துவ புனருத்தாரணத்திற்கு வழிவகுத்து விட்டிருந்தது. இந்நாட்டின் இப்போதைய பிரச்சினை, முதலாளித்துவத்தை நோக்கி மேலும் சோவியத் யூனியனின் தலைமையின் கீழ் செல்வதா அல்லது அமெரிக்காவினதும், மேற்கு ஜெர்மனியினதும் தலைமையில் செல்வதா என்பதே. எது எப்படியிருந்த போதிலும் ஆக்கிரமிப்பு நியாய மற்றதே. ஆகவே, நாம் செக்கோஸ்லவாக்கிய மக்களையும் மற்றைய நாட்டு மக்களையும் அவர்களின் சோவியத் திரிபுவாத சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நியாயமான போராட்டத்தில் ஆதரிக்கிறோம். அதேபோல் சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலைத் தூக்கி வீசுவதற்கான சோவியத் உழைக்கும் மக்களினதும் பாட்டாளி வர்க்கத்தினதும் நியாயமான போராட்டத்தில் அவர்களை உறுதியுடன் ஆதரிக்கின்றோம்.

## ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாத போராட்டம்

ஆகவே, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்வோமாக. எவன் நவீன திரிபுவாதத்திற்கு எதிராகப் போராடாமல் இருக்கிறானோ அவன் விரைவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தையும் கைவிட்டு விடுவான். உலக ஏகாதிபத்தியம் தனது இறுதிக் காலத்தில் நுழைத்துள்ள கடைசி முண்டுதான் நவீன திரிபுவாதம். உளுத்துப்போன மரத்திற்கு முண்டு ஒன்று தேவையாக இருப்பது போல ஏகாதிபத்தியத்திற்கும் நவீன திரிபுவாதம் என்ற முண்டு தேவையாக இருக்கிறது. ஆனால், ஒரு மரத்திற்கு முண்டு தேவை என்பது அதன் பலத்தைக் குறிப்பதல்ல; மரத்தின் பலவீனத்தையே குறிக்கிறது. முண்டை வெட்டிவிட்டால் மரம் தானாகவே விழுந்துவிடும். ஆகவே, இது ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாத—ஒன்றுடன் ஒன்று இணைந்த ஒரு முறையாகும். எனவே ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டமும், நவீன திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு ஒன்றன்பின் ஒன்றாகப் பல குழப்ப நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாகி, உலக மக்களிடமிருந்து தனிமைப்படுத் தப்படும் அதேவேளையில் அல்பேனியாவினதும், சீனாவினதும் மக்களும், அரசாங்கங்களும் வெற்றிகரமான சோஷலிஸநிர்மாணப் பாதையில் ஏறுநடைபோட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முன்னேற்றமான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து, விவசாயத்தையும் இயந்திரமயப்படுத்தியிருக்கிறார்கள். அதேவேளையில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தினதும் அணுசக்தி ஏகபோகத்தை தகர்த்தெறியும் விதத்தில் சீனா அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றமான கட்டத்தை அடைந்துள்ள தோடு உலகைச் சுற்றி வலம் வரும் செய்மதியையும் விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

எமது சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டான தோழர் மாசேதுங்கினால் தலைமை தாங்கப்படும் மகத்தான புகழ்பூத்த, சரியான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், மகத்தான மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்டான தோழர் அன்வர் ஹோஷாவினால் தலைமைதாங்கப்படும் வீரமிக்க அல்பேனிய தொழிலாளர் கட்சியும், உலகம் பரந்த தத்துவப் போராட்டத்தின்போது, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதத்தின் கேடுகெட்ட குணாம்சங்களை உறுதியுடன் உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள். உலகம் பூராவும் உள்ள சர்வதேச பாட்டாளி வர்க்கத்திற்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் சரியான பாதையென புரட்சிகரப் பாதையையும் காட்டியுள்ளார்கள்.

## மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் தாக்கம்

குறிப்பாக, தோழர் மாசேதுங்கினால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்ட சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி முழுச் சர்வதேச புரட்சிகர இயக்கத்தில் முன்பு எப்பொழுதுமே இல்லாத அளவு மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தியது. அது, சந்தேகத்துக்கிடமின்றி எமது சகாப்தத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்; அது தாக்கத்தில் மகத்தான ஒக்டோபர் புரட்சியைவிட உயர்ந்து விளங்குகிறது.

அது, சோஷலிஸப் புரட்சிக்குப் பின்னரும், வர்க்கங்கள் தொடர்ந்து இருக்கும் எனவும், எனவே, வர்க்கப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் எனவும், பாட்டாளி வர்க்க சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகாரத்தின் கீழ் அத்தகைய போராட்டங்களுக்குப் புரட்சியாளர்கள் தலைமை தாங்கி சோஷலிஸப் புரட்சியை இறுதி வெற்றிக்கு இட்டுச்செல்ல வேண்டும் எனவும் சகல புரட்சியாளர்களுக்கும் எடுத்துக்கூறியது.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி, மனிதர்களின் மானசீக எண்ணங்களை மாற்றவும், முதலாளி வர்க்க சுயநலக் கண்ணோட்டத்துக்குப் பதிலாக பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தை அவர்களது உள்ளத்தில் வளர்க்கவும், மாற்றப்பட்ட பொருளாதார அடிப்படைக்கு இணங்க மேற்தளத்தை மாற்றியமைக்கவும், சொந்த நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், சொந்தப் புகழ், செல்வாக்கு, பொருள் லாபங்கள், இலகுவான சொகுசு வாழ்க்கை முதலியவற்றைத் தேடி ஓடுதல் போன்ற முதலாளி வர்க்க கண்ணோட்டத்துக்கு எதிராகப் போராடுவதற்கு மக்களைத் தயார் செய்வதற்கும் எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். உலகை மாற்றியமைக்க விரும்பினால் முதலில் தம்மைத் தாமே மாற்றியமைக்க வேண்டும் என்று மனிதர்களுக்குப் போதிக்கப்பட்டது. இது உலகில் முன்பு எப்பொழுதுமே செய்யப்படாத ஒரு பரிசோதனையாகும். இதன் பூரண பலாபலன்கள் யதார்த்தம் ஆவதற்குப் பலநூற்றாண்டுகள் ஆகலாம்.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி; (தைவான் மாகாணத்தை தவிர்ந்த) சகல மாகாணங்களிலும், சுயாதிபத்தியப் பிரதேசங்களிலும் அதிகாரத்துக்கான புரட்சிகர அணிகள் நிறுவப்பட்டதுடன் பரிபூரண வெற்றியை அடைந்ததுடன், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது தேசிய மாநாட்டின் வெற்றிகரமான முடிவுடன் அரசியல் அரங்கிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அது, இப்போது விமர்சனம் - போராட்டம் - மாற்றம் ஆகியவற்றின் மூலம் மேலும் பலப்படுத்தப்பட்டு வருகிறது. அது, சீனா நிறம் மாறுவதை தடுத்துள்ளது. சோவியத் யூனியனில் நிகழ்ந்தது போல், முதலாளித்துவம் மீண்டும் புகுத்தப்படுவதைத் தடைசெய்தது; சீனாவை முதலாளித்துவப் பாதையில் திருப்ப முயற்சித்த லியுசௌ-ஷியினால் தலைமை தாங்கப்பட்ட சீனாவின் துரோகிகளினதும், காட்டிக் கொடுப்பாளர்களினதும் கும்பலை அது அம்பலப்படுத்தியது; அது, சீனாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்தி புரட்சியை எவ்வாறு இறுதிவரை முன்னெடுத்துச் செல்வது என்பதை எடுத்துக் காட்டியது.

அது, ஏகாதிபத்தியவாதிகளுக்கும், நவீன திரிபுவாதிகளுக்கும் சகலவிதமான பிற்போக்காளர்களுக்கும் முகத்தில் கரிபூசியதுடன் சீனாவில் முதலாளித்துவத்தை மீண்டும் புகுத்த நினைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பகற் கனவையும் தவிடுபொடியாக்கியது. எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவெனில், அது, சீனுவை உலகப் புரட்சியின் தளமாகப் பாதுகாத்து உலகப் புரட்சியின் வெற்றியை உத்தரவாதப்படுத்தியது ஆகும். விடுதலைக்கு முன்பு யெனுன் சீனுவின் மறுபகுதிகளுக்கு எப்படி விளங்கியதோ அது போலவே இன்று சீனு உலகின் மறுபகுதிகளுக்கு விளங்குகிறது. மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சிக்குப் பின் சீனு மேலும் வலிமையுள்ள நாடாக மாறிவிட்டது. புரட்சிகர உலகம் புளகாங்கிதம் அடையும் அதேவேளையில் பிற்போக்கு உலகம் கிடுகிடுக்க ஆரம்பித்துவிட்டது.

## மகத்தான மாசேதுங் சிந்தனை

நீண்ட, கடுமையான, விரிவான சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றதன் மூலமும், உலகில் ஜனத்தொகையில் கூடிய நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியதன் மூலமும், பின்னர், மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்தி அதன் மூலம் சீனுவில் முதலாளித்துவம் மீண்டும் புகுத்தப்படுவதைத் தடை செய்ததன் மூலமும், சோஷலிசப் புரட்சியின் பின்பும் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் தொடர்ந்திருக்கும் என்ற தத்துவத்தை உறுதியாக எடுத்துக் கூறியதன் மூலமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகார நிலைமையின்கீழ் வர்க்கப் போராட்டத்துக்கு தலைமை கொடுக்கும் முறையை எடுத்துக் காட்டியதன் மூலமும், உலகப் புரட்சியின் தளமாகச் சீனுவை பாதுகாத்ததன் மூலமும், தோழர் மாசேதுங் மார்க்சிஸம் - லெனினிஸத்தை புதிய உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்துள்ளார்.

இதனையே நாம் இன்று மாசேதுங் சிந்தனை என்று குறிப்பிடுகிறோம். மாசேதுங் சிந்தனை, மார்க்சிஸம் - லெனினிஸத்தின் வளர்ச்சியின் மிக உயர்ந்த கட்டமாகும். அது, உலகப் புரட்சிக்கான காலகட்டத்தின் மார்க்சிஸம்-லெனினிஸமாகும். அது எமது சகாப்தத்தின் மிக முன்னேறிய புரட்சிகரத் தத்துவமாகும். மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையைக் கற்று கிரகித்து அதனை இலங்கையின் ஸ்தூலமான நிலைமைகளுடன் இணைப்பதன் மூலம் மாத்திரமே, இலங்கையிலுள்ள தொழிலாளி வர்க்கமும், புரட்சிகர இயக்கமும் விடுதலையை வென்றெடுப்பதில் நம்பிக்கை கொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

# சோஷலிஸத் திசையில் அடியெடுத்து வைத்துவிட்டோமா?

மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டலின் கீழ் தேசிய நிகழ்ச்சிகளைக் கவனிப்போம். எமது கடந்த மாநாட்டுக்குப் பின்னர் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளி வர்க்கத்துக்கு முக்கியமான பல அரசியல் மாற்றங்கள் நமது நாட்டில் நிகழ்ந்துள்ளன. இவை எல்லாவற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி, **1970**, மே மாதம் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையின்கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - சமசமாஜக் கட்சி - கெனமன் திரிபுவாத கும்பல் ஆகியவற்றின் தேர்தல் வெற்றியாகும். தொழிலாளி வர்க்கத்தைப் பிரநிதித்துவப்படுத்துவதாகக் கூறிய - இன்னும் கூறுகின்ற - ஒரு காலத்தில் புரட்சி பற்றி கூரையிலிருந்து கத்திய சமசமாஜித் தலைமைப் பீடமும், கெனமன் திரிபுவாதக் கும்பலும் இத் தேர்தல் வெற்றியை, பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிஸத்திற்கான சமாதான மாற்றம் என்ற திரிபுவாதத் தத்துவத்துக்குக் கிடைத்த வெற்றி என்று புளுகுகின்றனர். இந்த அரசாங்கம் ''சோஷலிஸ'' அரசாங்கம் அல்லது சோஷலிஸத்தை நோக்கி நடைபோடும் அரசாங்கம் என்று அவர்கள் புளுகுகின்றனர். டாக்டர் என். எம். பெரேராவின் முதல் வரவு - செலவு திட்டத்தை சோஷலிஸ்ட் பட்ஜெட் என்றுகூட அவர்கள் புகழ்ந்தனர்.

இக் கூற்றுகளைப் பற்றிச் சிறிது தீவிரமாக ஆராய்வோம். சோஷலிஸம் என்பது விஞ்ஞான வார்த்தையாகும். அது, முதலாளித்துவ முறையாகிய சுரண்டலை ஒழித்துக்கட்டி சகல உற்பத்திச் சாதனங்களையும், பரிவர்த்தனையையும், விநியோகத்தையும் தொழிலாளி வர்க்க அரசின் உடைமையாக்கல் என்பதைக் குறிக்கின்றது. நாம் இந்த மாற்றத்தை அடைந்துவிட்டோமா? அல்லது அந்தத் திசையை நோக்கி நாம் ஓர் அடியாவது எடுத்து வைத்துவிட்டோமா?

''இல்லை'' என்பதே பதிலாகும். சோஷலிஸத்தை நோக்கி அடி எடுத்து வைப்பதற்கு முன்னர், சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்குத் தேவையான அடிப்படையான, ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றை ஒழித்துக்கட்டும் வேலையைக்கூட நாம் இன்னும் செய்யவில்லை. வேறுவார்த்தையில் கூறுவதானால், எமக்கு முன்னால் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு கடமைகளை நாம் நிறைவேற்றவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கடமைகளை நிறைவேற்றாமல், சோஷலிஸத்தை நோக்கி நடைபோடுவது பற்றிக் கூறுவது, மக்களைக் குழப்பி தவறான பாதையில் இட்டுச் செல்வதுடன், ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ சுரண்டலைப் பாதுகாக்கும் நலன்களை நோக்கிப் போடப்படும் படுபாதகமான பயங்கர நடையாகும். இந்தக் காரணத்தினாலேயே, ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தை யு. என். பி.யும் மற்றும் பிற்போக்குச் சக்திகளும் எதிர்க்கவில்லை. அதனாலேயே, என். யு. ஜயவர்த்தனா, முதலாளிமார் சம்மேளனத் தலைவர் மலோறி விஜயசிங்க போன்ற பிரபல முதலாளிகள் என். எம். பெரேராவின் வரவு - செலவு திட்டத்தை புகழ்ந்துள்ளனர். அந்தக் காரணத்தினாலேயே பிரிட்டிஷ் மூலதனத்தின் அங்கமாகிய ''லண்டன் பினான்சியல் டைம்ஸ்'' பத்திரிகை நிதி மந்திரிக்குப் புகழ்மாலை சூட்டியது. இப் பிரபல கனவான்கள் யாவரும் இலங்கையின் சோஷலிஸத்துக்கான ''பீடு நடை''யை ஆதரிக்கிறார்கள் என எம்மை நம்பவைக்க முயற்சிக்கிறார்களா? எல்லாவற்றிலும் கேவலமானது என்னவெனில், சோஷலிஸத்துக்கான இந்தப் ''பீடுநடை'' அமெரிக்க ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டின் கீழுள்ள சர்வதேச நிதி ஸ்தாபனத்தின் முற்று முழுதான ஆதரவின் கீழேயே நடைபெறப்போகின்றது என்பதாகும்.

## இரட்டைப் பேச்சு

இத்தகைய இரட்டைப் பேச்சு பெரும்பான்மையான மக்களை நீண்டகாலத்துக்கு ஏமாற்ற உதவாது. கூட்டு முன்னணியின் தேர்தல் வெற்றியானது, எமது நாட்டின் பொருளாதாரம் அந்நிய ஏகாதிபத்திய நலன்களுக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள நிலைமையில் எந்தவித அடிப்படை மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை எவரும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். மே 27 தேர்தல் வெற்றிக்குப் பின்னரும், எமது பொருளாதாரத்தின் ஆதிக்கம் - எமது தேயிலை, ரப்பர் தோட்டங்களில் பெரும்பாலானவை, எமது வங்கிகளில் பெரும்பாலானவை, எமது ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம், வர்த்தக நிலையங்கள், கப்பல்துறை ஆகியவற்றில் கூடுதலான பங்கு - அந்நிய ஏகாதிபத்திய ஏகபோக நலன்களின் கைகளிலேயே இன்னமும் உள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. சொத்துடமை உறவுகளிலோ அல்லது அடிப்படைப் பொருளாதார, சமூக மாற்றத்துக்குத் தேவையான அரசியல் அதிகாரத்தின் இயல்பிலோ எந்தவிதமாற்றமும் ஏற்படவில்லை. ஐக்கிய முன்னணியின் பொது வேலைத் திட்டத்தில் கூறப்பட்ட வங்கிகள் தேசியமயமாக்கப்படும் உறுதிமொழிகூடக் கைவிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் ஏற்றுமதி இறக்குமதியில் சிறிய அல்லது பெரிய பங்கைக் கையேற்றல் அல்லது அத்தியாவசிய பொருட்களைக் கையாள்வதற்கு கூட்டுத்தாபனங்களை ஸ்தாபிப்பது என்பன போன்ற பேச்சுக்களின் மூலம் நாம் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறோம் என்று எவரையும் ஏமாற்ற முடியாது. ரயில் சேவையும், தபால் சேவையும் பிரிட்டிஷ் காலத்திலேகூட அரசாங்கத்தின் கையிலேயே இருந்தன என்பதை நாம் மறக்க முடியாது. அவை அப்படி இருந்ததற்குக் காரணம் நல்ல திறமையான நிர்வாகம் கருதியே. ஆனால், முக்கியமான கேள்வி, யார் கையில் அரசியல் அதிகாரம் இருக்கிறது என்பதே. இந்த நிலையில் மாறுதல் ஏற்படாத வரையில் மாற்றம் ஏற்பட முடியாது.

## அவர்கள் சென்ற பாதையில் இவர்களும்

இவை எல்லாம் எதைக் குறிக்கின்றனவென்றால், கூட்டு முன்னணியின் அமைப்பு உறுப்பினர்கள் தமக்கு முந்திய ஆட்சியாளர்களின் பாதையிலிருந்து தீர்க்கமாக விலகிச் செல்ல சிந்திக்கவில்லை, சிந்திக்கப் போவதும் இல்லை என்பதையே குறிக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் உலக வங்கிக்கு மகாவலித் திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை யு. என். பி. அடகுவைத்துவிட்டது என்று ஒவ்வொரு தேர்தல் மேடையிலும் வாய்கிழியக்கத்திய இந்த கூட்டணி தற்போது பெருமளவில் அதேமாதிரிக்கொள்கையையே கடைப்பிடிக்கிறது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. பொதுத் தேர்தலுக்குப் பின்பு, உலக வங்கிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கொபென்ஹேகனுக்குச் சென்ற நிதி மந்திரி, அக்கூட்டத்தில், முந்திய யு. என். பி. அரசாங்கத்தின் நடவடிக்கைகளாகிய நாணய மதிப்பிறக்கம், கூப்பன் அரிசியை அரைவாசியாகக் குறைத்தது ஆகியவற்றை பொருளாதார ரீதியில் சரியான கொள்கைகளென்றும்; ஆனால், அரசியல் ரீதியில் தவறான கொள்கைகளென்றும் கூறிவிட்டு வந்திருக்கிறார். என்ன வங்குரோத்துத் தனமான பேச்சு? அதற்குப் பின்பு உலக வங்கியின் பிரதிநிதிகள் அரசாங்க விருந்தினர்களாக அலரி மாளிகையில் உபசரிக்கப்பட்டதையும், அதன் பின்பு நிதி மந்திரியால் அளிக்கப்பட்ட இராப்போஜன விருந்தில் கௌரவிக்கப் பட்டதையும் நாம் கண்டோம். அதன் விளைவு, நாணயமதிப்பை இன்னும் பதின்மூன்று வீதத்தால் குறைக்க வேண்டும் அல்லது அந்நிய நாட்டுச் செலாவணிச் சான்றிதழ் (பீக்ஸ்) விலையை 70 சத வீதத்திற்கு அதிகரிக்க வேண்டும் என்ற பயமுறுத்தல் கொலை வாள் எமது தலைகளின் மேல் மயிரிழையில் கட்டித் தொங்கவிடப் பட்டிருப்பதுபோல் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது, அரிசிவெட்டை நீக்கி இரண்டு கொத்து அரிசி திரும்பவும் கொடுத்தல் என்ற உறுதிமொழியைத்தான் பாருங்கள். கடந்த தேர்தலின்போது ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் மக்களுக்குக் கொடுப்பதற்கான இரண்டாவது கொத்து அரிசிக்காக சந்திர மண்டலத்திற்குக்கூடப் போகத் தயார் என்று உறுதி அளித்தனர். அதிர்ஷ்டவசமாக அவர்கள் அவ்வளவு தூரம் போகவேண்டிய தேவையின்றி சிறுவிலேயே அவர்களுக்குத் தேவையான அரிசி கிடைத்துவிட்டது. ஆனால், இரண்டாவது கொத்து அரிசி திரும்பவும் கொடுக்கப்பட்டது சம்பந்தமான ஆரவாரங்கள் செத்து மடிவதற்கிடையில், உள்நாட்டு வெளிநாட்டு, வர்த்தக மந்திரி ரி. பீ. இலங்கரத்தின மக்கள் தமது தேச பக்தியைக் காட்டுமுகமாக இரண்டாவது கொத்து அரிசியை வாங்காமல் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை மக்களுக்கு விடுத்தார். அதுமட்டுமா? முதலாவது கொத்து இலவச அரிசியையும் தாரை வார்த்தால் நாம் மிகவும் தேசபக்தியுள்ளவர்களெனக் கருதப் படுவோம் என்றும் உபதேசித்தார். இப்பொழுது அவர் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை அரசாங்கத்திடம் திரும்ப ஒப்படைப்பதற்கான தனது இயக்கத்தில் கவனம் செலுத்துகின்றார். டட்லி சேனநாயக்காவும் தனது காலத்தில் இதே மாதிரித் தான் பேசி நடித்தார் என்பதை நாம் சந்தேகத்திற்கிடமின்றி ஞாபகத்தில் வைத்திருக்கிறோம்.

## இது விந்தையல்ல

தேர்தல் காலத்தின்போது, மக்கள் கமிட்டிகள், ஆலோசனைச் சபைகள் என்பவற்றின் மூலம் மக்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற பரபரப்பான விஷயம் பரவலாக அடிபட்டதை நாம் கேட்டோம். ஆனால், தேர்தல் முடிந்து அரசாங்கம் பதவியிலமர்ந்த இந்த ஆறுமாத காலத்திற்குப் பின்பு, இந்தப் புளுகு மக்களை மடையர்களாக்கிய பெரும் ஏமாற்று என்பதை மக்கள் உணர்கிறார்கள். எங்காவது இந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருந்தால் அவைகள் உண்மையான அதிகாரமின்றி இருந்தன. அவைகளின் வேலை ஆலோசனை கூறுவது மட்டுமே. சுருங்கக் கூறின் அவை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நடுவில் அமைந்த தடையாகவே இருக்கின்றன. சிலவேளைகளில், அரசாங்கம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கும் காரணங்களை மக்களுக்கு எடுத்துக் கூற உதவும் சாதனமாக அமைந்திருக்கின்றன.

இது போன்ற அமைப்பின் கீழ் பிரதம மந்திரி உட்பட அவரின் கீழ் உள்ள எல்லோருமே சோஷலிஸம் என்பது கடும் உழைப்பும் கட்டுப்பாடுமே என்று புதிய முறையில் அர்த்தம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிப்பது இயற்கையானதே! இதுதான் தொழிலாளி வர்க்கத்திற்கு முதலாளி வர்க்கம் எப்பொழுதும் உபதேசித்து வந்துள்ள தாரகமந்திரமாகும். கடுமையாக வேலை செய்; கட்டுப்பாட்டுடன் இரு. முதலாளி வர்க்கத்திற்காக முதலாளித்துவத்தை வழிநடத்திச் செல்ல முயற்சிக்கும் கூட்டு முன்னணி அரசாங்கத்தின் தலைவர்கள் அதே சுலோகத்தின் துணையை நாடுவது விந்தை அல்லவேதான்.

ஆனால், அரசாங்கத்தை முண்டு கொடுக்க முயற்சி செய்வோர் தாம் பணம் படைத்தோர் மீதான வரியை அதிகரித்திருக்கிறார்கள் என்று கூறுவார்கள். சில வழிகளில் இது உண்மைதான். ஆனால், இது முதலாளி வர்க்கத்தின் தந்திரமாகவே எப்பொழுதும் இருந்து வந்திருக்கின்றது. முழுவதையும் இழப்பதைத் தடை செய்யுமுகமாக ஒரு பகுதியைச் கொடுத்து விடுவது. உள்ளவர்கள், இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ளாவிட்டால் புரட்சி ஏற்படுவதைத் தடுப்பதற்கு எந்த மார்க்கமுமே கிடையாது என்று சமீபத்தில் கூறினார் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி. பணம் படைத்தோர் மேல் விதிக்கப்படும் உயர்ந்த வரி சோஷலிஸத்திற்கு மாற்று அல்ல என்பதை நாம் ஞாபகத்திலிருத்திக் கொள்வோமாக.

## பிரச்சினைகள் பெருகுகின்றன

பெரிய நோட்டுக்கள் செல்லாது என்ற நாடகம் நாம் முன்பு ஹேஷ்யம் கூறியதுபோல பணவீக்கத்தைக் கொண்டு வந்திருப்பதை விட (அதிக பணம் கொஞ்சப் பொருட்களைத் துரத்திச் செல்ல நேரிடும்போது நிச்சயமாகப் பண வீக்கம் ஏற்படவே செய்யும்) சாதாரண மனிதனைப் பொறுத்த வரையில் வாழ்க்கைச் செலவு வான்நோக்கி உயர்ந்திருப்பதைவிட தன் வாழ்க்கை முறையில் வேறு எந்த மாற்றத்தையும் அவன் காணவில்லை. எதிர்காலத்திற்கான உறுதி மொழிகளிலேயோ அல்லது தனது துன்பத்திற்குப் பொருளாதாரப் பண்டிதர்கள் கூறும் காரணங்களிலேயோ அவனுக்கு எந்தவித நாட்டமும் இல்லை. அவனுக்குத் தெரிந்ததெல்லாம், தான் கடந்த தேர்தலில் யு. என். பி க்கு எதிராக வாக்களித்த காரணங்களில் அதி முக்கியமான காரணம் வாழ்க்கைச் செலவைக் கீழ் நோக்கிக் கொண்டு வரவேண்டும் என்பதே. இன்னொரு காரணம் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஏதாவது முடிவுகாண வேண்டும் என்பதாகும். ஆறுமாதம் முடிந்த பின்பு, இன்று அவன், இந்த அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளின் கரையைக்கூட இன்னும் தொடவில்லை என்பதைக் கண்டு கொண்டிருக்கிறான். அதற்கு எதிராகப் பிரச்சினைகள் மோசமாகிக் கொண்டே வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோன்ற நிலைகள் அரசாங்கத்தினுள்ளே கோமாளிகளைத் தோன்றச் செய்வதுண்டு. இதற்கு ஒரு உதாரணம்தான் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக மந்திரி இலங்கரத்தின பயறு, பருப்பு, பம்பாய் வெங்காயம், மிளகாய் ஆகியன இந்திய உணவுப் பொருட்களாக இருக்கும் காரணத்தினால் வான்நோக்கி அவற்றின் விலை ஏறிவிட்டதால் அவற்றை உண்ணவேண்டாம் என தனது கண்ணை இமைக்காமல் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். கனம் மந்திரி மத அனுஷ்டானங்களுக்காகவோ அல்லது சுகாதார காரணங்களுக்காகவோ பட்டினி கிடக்கும்படி இவர் மக்களைக் கேட்காமல் விட்டது விந்தையிலும் விந்தையே. அப்படிக் கேட்டிருந்தால் அது அரசாங்கத்தின் பிரச்சினைகள் அத்தனையையும் தீர்த்திருக்குமே!

## அடிப்படை மாறுதல் எதுவும் செய்துவிடவில்லை

மக்களின் ஆதரவு ஓரளவு உள்ள நிலையிலும், பாராளுமன்றத்தினுள்ளே சரியான எதிர்ப்பு இல்லாத நிலையிலும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பது என்ற உடனடிப் பிரச்சினைகளை - சோஷலிஸ நிர்மாணத்தைத்தான் விட்டுவிடுவோம் - இந்த அரசாங்கம் தீர்க்க முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன? பூர்ஷுவா பாராளுமன்ற ஜனநாயக சரித்திரத்தில் எந்த நாட்டிலுள்ள எந்த அரசாங்கமாவது நிபந்தனையற்ற பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருக்குமேயாயிருந்தால் அது இந்த நாட்டிலுள்ள இந்த அரசாங்கம் தான். இதன் பாராளுமன்றப் பெரும்பான்மையானது மிகவும் அதிகமாக இருப்பதால் இந்த அரசாங்கம் தான் நினைத்ததுபோல் எதையும் செய்ய முடியும். ஆனால், முந்திய அரசாங்கம் செய்ததை விட அடிப்படை மாறுதலான எதையும் இந்த அரசாங்கம் செய்து விடவில்லை.

## புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தினால் பலனில்லை

உண்மையில், புத்தம் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றை அளிப்பதற்கு இந்த அரசாங்கம் உறுதி அளித்திருப்பதோடு, அது சம்பந்தமாக தேவையற்ற முறையில் ஓர் பரபரப்பையும் கிளப்பியிருக்கிறது. ஆனால், வெறும் அரசியல் அமைப்புச் சட்டம் மாத்திரம் மக்களுக்கு எதையும் அளித்துவிட முடியாது. அரசியல் அமைப்புச் சட்டத்தை பேக்கரிக்காரனிடம் காட்டி ஒரு துண்டு பாண் பெற்றுக்கொள்ள முடியாது. இச் சட்டம் வெறுமனே ஒரு கடதாசித் துண்டு தான். உண்மையில், இதற்குப் பின்னால் இருக்கும் அதிகாரத்திலேயே முழு விஷய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் தங்கியிருக்கிறது. அந்த அதிகாரம் இப்பொழுதும் பிற் போக்குவாதிகளின் கையிலேயே இருக்கின்றது. எழுதும் அரசியல் அமைப்புச் சட்டம் எவ்வளவுதான் திறமையானதாக இருந்தாலும், தொழிலாளி வர்க்கமும் அவர்களின் நேச சக்தி களும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுந்தவரை அது ஒரு வெத்து வேட்டாகவே அமையும். ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டத் தின் நன்மை தீமைகளைப் பற்றியோ அல்லது சரியான முறையில் எழுதப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தொழிலாளர் களின் நலன்களைப் பாதுகாக்க முடியுமா என்பன போன்ற வேண்டா விவாதத்தினுல் நாம் திசை திருப்பப்படாமல் இருப்போமாக. இதுவரை நாம் அனுபவித்த துன்பங்களுக் கெல்லாம் சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டம்தான் முக்கிய காரணமல்ல என்பதையும், இனி வரப்போகும் புதிய சட்டத்தி னுல் இவையெல்லாம் நீங்கிவிடப்போவதில்லை என்பதையும் உணர்ந்துகொள்வோமாக.

எமது துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணம், வறுமை, வேலையின்மை, உயர்ந்துசெல்லும் வாழ்க்கைச் செலவு ஆகிய வற்றிற்குக் காரணம், வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தினுல் அதி காரம் செலுத்தப்படும் தற்போதைய பொருளாதாரத்தின் கீழ் அமைந்த சுரண்டல் அமைப்பிலேயே காணக்கிடக்கிறது. ஆகவே, ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பிலும் அதன் காவல் நாயாகச் செயல் படும் அரசு யந்திரம் ஆகியவற்றின் மேலேயே நாம் எமது தாக் குதலை நடத்த வேண்டும். அந்தத் திசையில் நாம் பார்வையைச் செலுத்தாமல் எமது கவனத்தை வேறு திசைகளுக்கு இழுப்பதற் காகவே முதலாளித்துவமும் மற்றும் சுரண்டும் வர்க்கங்களும் பாராளுமன்றம் என்ற ஆயுதத்தையும், பூர்ஷுவா பாராளு மன்ற ஜனநாயகம் என்ற ஏமாற்று வித்தையையும் கண்டு பிடித் திருக்கின்றன.

## ஓர் அலங்காரத் திரை

மக்களை ஏமாற்றி அவர்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்காக வும், பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிஸத்திற்கான சமாதான மாற்றம் என்ற மாயையை தொழிலாளி வர்க்கத்திடையே உண் டாக்கி அவர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிப்பதற்கும், உண்மை அரசு அதிகாரம் ஆயுதப் படைகளிலேயே தங்கியிருக் கிறது என்ற எண்ணத்தை மக்களிடமிருந்து கலைப்பதற்காகவுமே சுரண்டும் வர்க்கங்களினுல் இந்தச் சாதனங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. ஆயுதப் போராட்டத்திற்குப் பதிலாக வார்த்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை பிரயோகிப்பதற்கு இது ஓர் முயற்சியாகும். பாராளுமன்றம் என்பது மூலதனத்தின் கேடுகெட்ட சர்வாதிகாரத்தை மறைக்கப் பாவிக்கப்படும் ஓர் அலங்காரத் திரையாகும்.

பூர்ஷுவா ஜனநாயகத்தின் புரட்டுத்தனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு, கடந்த காலத்து யு.என்.பி. அரசாங்கமும் அதற்கு முந்திய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமும் தங்கள் ஆட்சியின் பெரும் பகுதியை அவசரகால நிலைமையின் கீழ் கொண்டு நடத்தியதாகும். அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்திருப்பதாகக் கூறப்படும் இந்த அரசாங்கம் கூட, ஆட்சிபீடமேறி ஐந்து மாதம் கழிவதற்கிடையில் அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தி ஆட்சியைக்கொண்டு நடத்தும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கிறது. இந்த அரசாங்கம் எடுத்த முதல் தீர்மானங்களில் ஒரு தீர்மானம் அடக்குமுறை பொலிஸ் படையை மேலும் 6000த் தால் அதிகரிப்பதும், அவர்களின் சம்பளத்தைக் கூட்டுவதுமாகும். தன்னால் தீர்க்க முடியாத, ஆழமாகிவரும் பொருளாதாரக் குழப்ப நிலை காரணமாக வளரவிருக்கும் மக்கள் எதிர்ப்பை அரசாங்கம் சரியாக எதிர்ப்பார்க்கிறது போலும்; எனவேதான், மக்களின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு தன்னை அடக்குமுறை அதிகாரங்களுடன் தயார் செய்கிறது போலும்.

இதனால்தான் லெனின் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியிருக்கிறார். ''எவ்வளவுதான் ஜனநாயகம் உள்ளதாக இருந்தாலும் எந்த அரசிலும் ஓட்டை ஒடிசல்கள் இல்லாமல் இல்லை; அல்லது, அமைதிக்குப் பங்கம் ஏற்படும் நேரத்தில், அதாவது சுரண்டப் படும் வர்க்கம் தனது அடிமை நிலைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ''குழப்பம்'' விளைவிக்கும் நேரத்தில், பூர்ஷுவாக்களின் நன்மைகளைப் பாதுகாப்பதற்கென தொழிலாளர்களுக்கு எதிராக ராணுவத்தை அனுப்பும் அதிகாரம் அல்லது கேள்வி முறையின்றி சுட்டுக் கொல்லும் சட்டத்தைப் பிரகடனப் படுத்தும் அதிகாரம் ஆகியன கொண்ட விதிகள் இல்லாமல் இல்லை.''

அவர் மேலும் சொன்னார் ''முதலாளிகளின் சொத்துடமையும் அதிகாரமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், ஒரு பூர்ஷுவா பாராளுமன்றம் எவ்வளவுதான் ஜனநாயகம் உள்ளதாக இருந்தாலும், நாடு எவ்வளவுதான் ஜனநாயகக் குடியரசாக இருந்தாலும், அது ,ஒரு சில சுரண்டுபவர்களால் லட்சோப லட்சம் தொழிலாளர்களை நசுக்குவதற்கு ஒரு யந்திரமாகவே பாவிக்கப் படும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான், அவர் மேலும் கூறினர்; ''பூர்ஷுவா ஜனநாயகம்......எப்படியிருந்த போதிலும் முதலாளித்துவத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டதாக, துண்டாடப்பட்டதாக, பொய்யானதாக உள்ளொன்றும் புறமொன்றுமானதாக, பணம் படைத்தோருக்குச் சொந்தமானதாக, சுரண்டப்படுவோருக்கும், வறியவர்களுக்கும் பொறிகிடங்காக, ஏமாற்ருக இருக்கிறது.''

## அம்பலப்படுத்த வேண்டும்

தொழிலாளி வர்க்கத்தைப் புரட்சிப் பாதையில் இட்டுச் செல்வதாயிருந்தால், பூர்ஷுவா பாராளுமன்ற ஜனநாயகத்தின் வங்குரோட்டுத்தனத்தை நாம் சரியான முறையில் அம்பலப்படுத்துவது மிகவும் அவசியமான ஒரு வேலையாகும். சமசமாஜக் கட்சித் தலைமையினதும், கெனமன் திரிபுவாதக் கும்பலினதும் துரோகத்தாலும், பூர்ஷுவா பாராளுமன்ற ஜனநாயகம் என்ற அபினை வெகுஜனங்களுக்கு அவர்கள் அதிகமானளவு உண்ணக் கொடுத்ததாலும், வர்க்க ஒத்துழைப்புப் பாதையைப் பற்றிப் போதித்ததாலும், பாராளுமன்றத்தின்மூலம் சமாதான சோஷலிஸ மாற்றம் என்ற கொள்கையை அழகுபடுத்தியதாலும் இந்தவேலை மிகவும் கடினமாக்கப்பட்டுள்ளது. ஆனல், சுருக்கமாகக் கூறின், இதே காரணத்திற்காகத்தான் எமக்கு முன்னிருக்கும் இந்த வேலை மிகவும் அவசியமானதும் அவசரமானதும் இன்னும் கவனத்தோடு கையாளப்படவேண்டியதும் ஆகும்.

பூர்ஷுவா பாரளுமன்ற ஜனநாயகமும், பாராளுமன்ற அமைப்பும் தொழிலாளர்களின் தினசரி வாழ்க்கை முறையில் எந்தவிதமாக அடிப்படை மாற்றங்களையும் கொண்டுவரவில்லை என்ற உண்மையை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இலங்கை மக்கள் சர்வஜன வாக்குரிமையைக் கடந்த 40 வருடங்களாகப் பிரயோகித்து வருகிருர்கள். எமது நாட்டுப் பெண்களிலும் பார்க்க மிகவும் முன்னேறிய பிரான்சு தேசப் பெண்களுக்கு இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்பு 1945ம் ஆண்டின் இறுதியிலேயே வாக்குரிமை கிடைத்தது. அதே நேரத்தில் சுவிற்சர்லாந்துப் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இன்று கூட இல்லை. ஆனல், எம் நாட்டுப் பெண்கள் இத்த உரிமையை 1931ம் ஆண்டிலிருந்தே பிரயோகித்து வருகிருர்கள். இலங்கை மக்கள் இதுவரை இரண்டு தடவை ராஜ்ய சபையையும், ஏழு தடவை பாராளுமன்றத்தையும் தெரிவு செய்திருக்கிருர்கள். அவர்கள், சட்டம் ஆக்குவதற்கென பெரிய பெரிய கனவான்களை — கேம்பிரிஜ், ஒக்ஸ்போர்ட் பட்டதாரிகள், அதிகம் படித்த பாரிஸ்டர்கள், கனல் கக்கும் பேச்சாளர்கள், வாதத்திறமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தவர்கள் ஆகிய பலரை — தெரிந்து அனுப்பியிருக்கிறார்கள். இவர்களில் சிலர் 25 ஆண்டுகளுக்கு மேலாக அங்கிருந்து வருகிறார்கள். இவை மறுக்கமுடியாத உண்மைகளாகும்.

## சுரண்டல் சிறிதளவாவது குறைந்துள்ளதா?

ஆனால், நாம் கேட்கும் கேள்வி இதுதான். 1931ம் ஆண்டு, சர்வஜன வாக்குரிமை, பாராளுமன்ற வாதம் என்ற இந்தக் கேலிக்கூத்துக்கள் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது இருந்து வந்த தொழிலாளி வர்க்கத்திற்கெதிரான கொடிய சுரண்டல், பொது மனிதனின் முதுகில் சவாரி செய்து பாராளுமன்றத்திற்குச் சென்ற இந்தக் கனவான்கள் செய்த முயற்சிகளாலும், ஆற்றிய அருமையான பேச்சுக்களாலும் ஒரு சிறிதளவாவது குறைக்கப்பட்டிருக்கிறதா?

முதன் முறையாக 1947ம் ஆண்டு முதலாவது பராளுமன்றம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து, கடிகாரத்தின் கீழ் ஆடும் பெண்டூலம் போல, சேனநாயக்க குடும்பத்திற்கும், பண்டாரநாயக்கா குடும்பத்திற்கும் இடையில் சங்கீதக் கதிரை விளையாட்டு ஆடப்பட்டு வருகிறது. முதல் ஒன்பது வருடங்கள் இந்தப் பெண்டூலம் சேனநாயக்கா குடும்பத்தின் பக்கமும், பின்பு அடுத்த ஒன்பது வருடங்கள் பண்டாரநாயக்கா குடும்பத்தின் பக்கமும் அசைந்தது. அதன் பிறகு வந்த ஐந்து வருடங்கள் சேனநாயக்கா பக்கமும், இப்பொழுது திரும்பவும் பண்டாரநாயக்கா பக்கமுமாகவும் அது நகர்ந்திருக்கிறது. மிகவும் ரசமான இந்த விஷயத்தைத்தான், அதாவது அடிப்படை மாற்றங்கள் எதுவும்ஏற்படமுடியாத நிலையில், ஒன்றுக்கும் இன்னொன்றிற்கும் இடையில் தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் உண்டு என்ற மாயையை மக்களுக்கு உண்டாக்குவதைத் தான் பாராளுமன்ற அமைப்பை ஆக்கியோர்கள் மனதில் வைத்திருந்திருப்பார்கள். உண்மையில் அவர்கள் நினைத்ததே நடக்கிறது.

ஏன் இந்த நிலை? இந்தத் துன்ப நிலைக்குக் காரணம் நெற்றி வியர்வை சிந்தும் மக்கள் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வாதிகளின் கைகளில் சிக்கிசுரண்டப்படுவதுதான்; தொழிலாளர்களும், விவசாயிகளும் மற்றும் உழைக்கும் மக்களும் தங்கள் தொழில் சக்தியைச் சுரண்டும் வர்க்கங்களுக்கு மிகவும் குறைந்த விலையில் விற்க நிர்ப்பந்திக்கப்படுவதுதான். உழைக்கும் மக்களின் தொழில் சக்தியிலிருந்து சிருஷ்டிக்கப்படும் உபரி பெறுமதி மூலம் கிடைக்கும் பெரும் லாபத்தின் விளைவாக சுரண்டும் வர்க்கம் மேலும் மேலும் பணம் படைத்ததாக ஆகிக்கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளையில், பாராளுமன்றத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த இரக்கமற்ற சுரண்டல் காரணமாக உழைக்கும் மக்கள் மேலும், மேலும் வறுமைக்கு உள்ளாகிக் கொண்டு வருகின்றனர்.

தேர்தல்கள் இந்த நிலையை என்றுமே மாற்றவில்லை. வெறும் பேச்சு மடமாக இருக்கும் பாராளுமன்றம் முதலாளிகளினதும், நிலப்பிரபுக்களினதும் சுரண்டலைப் பாதுகாக்கவில்லை என்பதும், அதற்கு எதிரிடையாக சுரண்டும் வர்க்கங்களினால் பெரும் செலவில் அமைக்கப்பட்ட அவர்களின் காவல் நாயாக இருக்கும் அரசு யந்திரத்தினாலேயே இந்தச் சுரண்டல் பாதுகாக்கப்படுகின்றது என்பதுமே காரணமாகும். அரசு யந்திரம் என்று கூறும்போது நாம் முக்கியமாக ஆயுதப்படைகள், சட்ட அமைப்புக்கள், நீதிபரிபாலனம், சிறைச்சாலைகள், உயர்ந்த சம்பளம் பெறும் அதிகார வர்க்கம் ஆகியவற்றையே குறிக்கிறோம். இவைகள் தேர்தல் முறைக்கு உட்படுத்தப்படுவதுமில்லை; எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இவை மாறுவதுமில்லை. இதில் சம்பந்தப்பட்டவர்கள்தான், எவர் ஆட்சியில் இருந்ததாகக் கருதப்பட்டபோதிலும், உண்மையில் நாட்டை ஆள்பவர்கள். கீனுகலைத் தோட்டத்தில் இரண்டு தொழிலாளர்களைப் பொலிஸ் சுட்டுக் கொன்ற நிகழ்ச்சி, பாராளுமன்றத்தில் என்ன மாற்றம் ஏற்பட்டபோதிலும் அரசு யந்திரம் பழைய முறையிலேயே செயல்படுகின்றது என்பதைத் தெளிவாக விளக்குகின்றது.

## சுலபமாக புரிந்துகொள்ளலாம்

இவை தொழிலாளர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய விஷயங்கள். ஏனெனில், அவர்கள் தங்கள் பொருளாதாரப் போராட்டங்களின்போது கூட, சுரண்டும் வர்க்கங்களின் காவல் நாயான பொலிஸ், ராணுவம், நீதிபரிபாலனம் ஆகியவற்றின் ரூபத்திலிருக்கும் அரசு யந்திரத்தின் குறுக்கீடுகளுக்கு ஆளாகிறார்கள். வேலைநிறுத்தம் நடைபெறும் பொழுது முதலாவதாக ஸ்தலத்திற்கு விரைந்து வரும் ஆயுதம் தரித்த பொலிஸ்படை தொழிலாளர்களைப் பாதுகாக்க வரவில்லை என்பதும், முதலாளியையும் அவனின் தனிச் சொத்துடைமையையும் பாதுகாக்கவே வந்தது என்பதும் தொழிலாளர்கள் நன்கறிந்த ஒரு விஷயமாகும். ஆகவேதான், மார்க்ஸ் போதித்த ''அரசு என்பது ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கம் அடக்குவதற்கான ஒரு கருவி'' என்பதை தொழிலாளி வர்க்கத்திற்கு விளங்கக் கூடிய முறையில் கற்றுக்கொடுக்க வேண்டும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெறுவதன் மூலம் அடக்கு முறை பூர்ஷுவா அரசு யந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தை தொழிலாளி வர்க்கம் தனது நலன்களுக்காகப் பாவிக்க முடியாது என்பதையும் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். எனவே, தொழிலாளி வர்க்கம் லெனின் கூறியது போல, இப்பொழுதிருக்கும் அடக்குமுறை பூர்ஷுவா அரசு யந்திரத்தை பலாத்காரத்தின் மூலம் தரைமட்டமாக்கி அதனிடத்தில் ஆரம்ப நிலையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு அமைப்பு என்று சொல்லப்படும் தொழிலாளி வர்க்கத்தினதும், அதன் நேச சக்திகளினதும் அரசு யந்திரத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

எனவேதான், ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பை உடைக்காமல், அதன் காவல் நாயாக இயங்கும் அரசு யந்திரத்தைப் பலாத்காரத்தால் தகர்க்காமல், பூர்ஷுவா பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் எந்த ஆட்சி பதவிக்கு வந்தாலும் மக்களின் அடிப்படைப் பிரச்னைகள் தீர்க்கப்படமாட்டா.

முதன் முதலில் மார்க்ஸினால் தரப்பட்டு, பின்பு லெனினினால் விளக்கமாக விரித்துக் கூறப்பட்ட இந்த அரசுபற்றிய தத்துவத்தை சரியான முறையில் புரிந்து கொண்டால் தான் தொழிலாளி வர்க்கம், வங்குரோட்டுப் பாராளுமன்றப் பாதையை நிராகரித்து, புரட்சிப் பாதைக்குச் செல்ல முடியும். ஆசியாக் கண்டத்தின் பெரும் பகுதி நாடுகளின் மக்கள்—வியட்நாம், பிலிப்பைன்ஸ், லாவோஸ், கம்போடியா, பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலாயா, இந்தியாவில் சில பகுதிகள்—புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதையில் எப்பொழுதே இறங்கிவிட்டார்கள் என்பதை நினைக்கும் பொழுது இலங்கையில் பரவலாக இருக்கும் அரசியல் அமைப்புச் சட்ட பாராளுமன்றவாத தொழுகை காலம் கடந்ததாக நாற்றமெடுப்பதை நாம் உணரலாம்.

## மாசேதுங் சிந்தனையை கிரகித்து நடைமுறைப்படுத்துவோமாக

ஆனபடியால், தான் தொழிலாளி வர்க்கமும், புரட்சிகர இயக்கமும், தோழர் மாசேதுங்கின் போதனையில் அடங்கியிருக்கும் ''துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்ற உண்மையை கிரகிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதுதான் மார்க்சிஸம்-லெனினிஸத்தின் அடக்கமாகும்.

தோழர் மாசேதுங் தனது மக்கள் யுத்தமும், மக்கள் சேனையும் என்ற சித்தாந்தத்தின் மூலம் மார்க்சிஸம்-லெனினிஸத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கிறார். அடக்குமுறை பூர்ஷுவா அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமில்லாத அளவிற்குத் தினசரி கொடூரத்தனமாகவும், ராணுவ மயமாகவும் ஆக்கப்படுவதை எம் கண்ணுல் காண்கி ேரும். இதைக் கண்ணுல் காணும் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் செய்யவேண்டியதென்ன? எல்லா ஏகாதிபத்தியவாதிகளும் அவர் களின் அடிவருடிகளும் கையில் வாளேந்திக் கொலை செய்யப் புறப்பட்டிருக்கிறுர்கள் என்று தோழர் மாசேதுங் கூறியிருக்கிறுர். மக்களும் இதை அறிந்து அதற்குத் தக்கவாறு செயலாற்றவேண் டும். வேறு வார்த்தைகளில் கூறுவதாணுல் ஆயுதந்தரித்த எதிர்ப் புரட்சியை, ஆயுதந்தரித்த புரட்சியினுலேயே முறியடிக்க முடியும் என்று போதித்திருக்கிறுர்.

அவர் மேலும் கூறுகிறுர்; எங்களிலும்பார்க்க எதிரி ஆரம்பத் தில் பலமுள்ளவஞக இருப்பதாலும், அவனுடைய பலம் முழுவ தும், உதாரணமாக ராணுவ - பொலிஸ் தலைமை நிலையங்கள், வாஞெலி நிலையம், மத்திய தபால் கந்தோர், முக்கிய புகையிரத நிலையங்கள் ஆகியன நகரங்களில் குவிக்கப்பட்டிருப்பதாலும், கிராமப் புறங்களைத் தாக்குவதற்கு எதிரி நகரங்களை உபயோகிப் பதாலும், அக்கொடிய எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு புரட்சிவாதிகள் பின்தங்கிய கிராமங்களை முன்னேறிய ஸ்திரப் படுத்திய தளங்களாகவும், பெரும் ராணுவ, அரசியல், பொரு ளாதார, கலாச்சாரக் கோட்டையாகவும் மாற்றவேண்டியது அவசியமாகும். இந்த வழியாக உறுதியாகப் போராடுவதின் மூலம்தான் சிறிது சிறிதாகப் புரட்சியின் முழு வெற்றியையும் அடைய முடியும். ஏகாதிபத்தியத்துடனும் அதன் பாதந்தாங்கி களுடனும் உடன்பாடு செய்துகொள்ள விரும்பாமல் தொடர்ந்து போராடத் தீர்மானம் கொண்டிருந்தால், படைகளை உறுதியா கக் கட்டி வளர்க்க எண்ணிஞல், தன்னுடைய பலம் குறைவாக இருக்கும் வேளையில் எதிரியுடன் போராடுவதைத் தவிர்க்க வேண்டுமென்றுல் இதுதான் மிகவும் முக்கியமான வழியாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதாயிருந்தால், நாம் கிராமப் புரத்திற்குச் சென்று, கிராம வெகுஜனங்களைத் தட்டி எழுப்பி அணிதிரட்டி, புரட்சிகர தளங்கள் அமைத்து, மக்கள் சேனையைக் கட்டி வளர்த்து, அதற்குப் பயிற்சி அளித்து அதன் மூலம் மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டு, இறுதியாகக் கிராமங்களிலிருந்து நகரங் களைச் சூழ்ந்து அவற்றை விடுதலை செய்யவேண்டும் என்றும் தோழர் மாசேதுங் போதித்திருக்கிறுர்.

இதுதான், சீனப் புரட்சியை வெற்றிப்பாதையில் நடத்திச் சென்றவேளையில் தோழர் மாசேதுங்கிஞல் உருவாக்கப்பட்ட மக்கள் யுத்தம் என்னும் தத்துவமாகும். தமது நாட்டில் புரட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெறவேண்டும் என்று எண்ணுபவர்கள் அனைவரும் உலக ரீதியாக அங்கீகாரம் பெற்றிருக்கும் இந்தத் தத்துவத்தைச் சரியான முறையில் புரிந்து கொள்வது அவசியத்திலும் அவசியமாகும். ஆகவேதான், விடுதலைக்கு அவர்களை வழிகாட்டக்கூடிய ஒரேயொரு புரட்சிகர தத்துவமான மாசேதுங் சிந்தனையைப் படித்து, விளங்கி நடைமுறைப்படுத்தும்படி எமது அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். இதுதான் இந்த மாநாடு விடுக்கக்கூடிய பெரியதொரு அழைப்பாகும். மாசேதுங் சிந்தனையைப் பரப்பும் ஒரு பாடசாலையாக இந்த மாநாட்டை மாற்றுவோமாக!

# III

மாசேதுங் சிந்தனையை நாம் சரியான முறையில் விளங்கிக் கொண்டால் ஜனதா விமுக்தி பெரமுன என்ற பெயரில் புரட்சி என்ற பொய் முகமூடி அணிந்து உலாவும் சேகுவேரா கும்பலை இனங்கண்டுகொள்ள முடியும்.

சேகுவேரா என்ற பெயரில் அமைந்த தத்துவத்திற்கும், எமக்கும் உள்ள முரண்பாடு, மார்க்சிஸம்-லெனினிஸத் தத்துவமான தொழிலாளி வர்க்கத்தைப் புரட்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஓர் அரசியல் கட்சியின் அவசியத்தை சேகுவேரா நிராகரிப்பதும், புரட்சியை உண்டாக்குவதில் லட்சக்கணக்கான வெகுஜனங்கள் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் நிராகரிப்பதுமேயாகும்.

தொழிலாளி வர்க்கம் புரட்சியின் வழியில் செல்வதாயிருந்தால், சுய விமர்சனத்தை உபயோகித்து, வெகு ஜனங்களுடன் தொடர்பு வைத்திருக்கக் கூடிய கொள்கையுடைய மார்க்சிஸம்-லெனினிஸத் தத்துவத்தை ஆயுதமாகக் கொண்ட நல்ல ஒழுக்கமுடன் அமைந்த கட்சியின் அவசியத்தை வலியுறுத்திக் கூறும் மாசேதுங் சிந்தனையும், சேகுவேராவின் தத்துவமும், இரண்டும் முற்றிலும் எதிரானதாகும். வெகுஜனங்கள் பரந்துபட்ட முறையில் லட்சக்கணக்காகப் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் மாசேதுங் சிந்தனை வலியுறுத்துகின்றது.

ஆனால், உள்நாட்டு சேகுவேரா கும்பல் எதிர்ப்புரட்சி என்ற பாதையில் வெகுதூரம் பிரயாணம் செய்துவிட்டது. புரட்சிகர தத்துவத்தினால் மூடிமறைத்து மார்க்சிஸம்-லெனினிஸம் என்ற பெயரில் பச்சைவகுப்புவாதத்தை இக்கும்பல் மக்களுக்கு அளித்துள்ளது.

317472



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபரின் ஒரு பகுதியினரை, விசேஷமாக மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனைக் கருத்துக்கள் குறைவாக வெளிவந்யிள்ள தேசிய மொழிகளுடன் தொடர்புள்ள வாலிபர்களைத் தவறான வழியில் இட்டுச் சென்று குழப்ப நிலையில் ஆழ்த்துவதில் இக்கும்பல் வெற்றி கண்டுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியினதும், கெனமன் திரிபுவாதக் கும்பலினதும் கபடத்தனத்தையும் துரோகத்தனத்தையும் தமது நலன்களுக்காகப் பிரயோகித்து அவர்களின் பராளுமன்ற சந்தர்ப்பவாதத்தினால் எழுந்துள்ள மக்களின் அதிருப்தியையும் எதிர்ப்பையும் தமது நன்மைகளுக்காக இவர்கள் உபயோகித்திருக்கிறார்கள். வாலிபர்களிடையே வளர்ந்து வரும் புரட்சிகர எழுச்சியையும் புரட்சி மீதான விருப்பையும் கூட இக் கும்பல் தனது நலன்களுக்காகப் பாவித்துள்ளது.

## எதிர்ப் புரட்சிக் கும்பல்

முதலாளித்துவ பத்திரிகைகளிடமிருந்தும் மற்றும் பிற்போக்கு சக்திகளிடமிருந்தும் இந்த உள்நாட்டு சேகுவேரா கும்பல் வெளிப்படையாக பெற்ற உதவியும், ஆதரவும், சந்தேகத்திற்கிடமான முறையில் இக் கும்பலுக்கு கிடைத்த நிதி உதவியும், உள்ளுக்குள் பிளவை உள்ளாக்கியதோடு, வாலிபர்களில் நியாயமான பகுதியிடமிருந்து இவர்களைத் தனிமைப்படுத்தியுள்ளது.

ஆனால், இந்தக் கும்பலின் கெட்ட எண்ணத்தையும், எதிர்ப் புரட்சிகர ஆழமான செல்வாக்கையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. இலங்கையில் பரந்த முறையில் ஆதரவு பெற்று வரும் மாசேதுங் சிந்தனையை எதிர்ப்பதற்காகவே இந்தக் கும்பல் உருவாக்கப்பட்டது. சமாதான சகஜீவனம், சமாதான மாற்றம் என்ற புஸ்வாண திரிபுவாத தத்துவங்களின் உதவியோடு மாசேதுங் சிந்தனையை எதிர்க்க முடியாது என்பதைப் பிற்போக்குவாதிகள் அறிந்திருந்தனர். எனவே, சிறிது புரட்சிகரமான ஆனால், பிற்போக்குக் காரணங்களுக்காகப் பாவிக்கக்கூடிய ஒரு தத்துவத்தைக் கண்டுபிடிக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமாக இருந்தது. அதன் விளைவாகப் பிறந்து, புரட்சியுடன் பச்சை வகுப்புவாதத்தை இணைத்து அதன் மூலம், வளர்ந்துவரும் புரட்சிகர இயக்கத்திற்கு மரண அடி கொடுக்க சேகுவேராவாதிகளின் இத் தத்துவம் முயலுகிறது.

இதுவரையில், டி.எஸ். சேனநாயக்கா, ஆர்.ஜி. சேனநாயக்கா, ஹேமா பஸநாயக்கா, கே.எம்.பி. ராஜரத்ன போன்றோரும் மற்றும், தமிழர்களிடையே உள்ள வகுப்புவாதிகளும் வகுப்புவாதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பிற்போக்குவாதத்துடன் இணைக்க முயன்றிருக்கிறார்கள். ஆனால், சேகுவேராவாதிகள் ஒரு புதிய கலவையைக் கொடுத்திருக்கிறார்கள். இதுதான் அவர்கள் சில பகுதிகளில் தற்காலிக வெற்றிகள் பெற்றதற்குக் காரணமாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு எதிரிடையாக குறுகிய தேசிய வாதத்தை இவர்கள் தூண்டியிருக்கிறார்கள். குறுகிய தேசிய வாதமானது எமது மக்களின் பல பகுதியினரையும் பொது விரோதிக்கு எதிராக ஐக்கியப்பட விடாமல் ஒருவருக்கொருவர் எதிரிகளாக ஆக்குவதற்கே உதவும். இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இரத்தம் உறைந்து போகக்கூடிய இந்திய எதிர்ப்பு வகுப்புவாத உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதன் மூலம் உள்நாட்டு சேகுவேராவாதிகள் புரட்சிகர இயக்கத்திற்குப் பாதகம் செய்துள்ளதுடன், எதிர்ப்புரட்சிக்கும் முறையாக உதவியுள்ளார்கள்.

## புரட்சிகர இயக்கத்தை பாதுகாக்க வேண்டும்

ஒரு பகுதியில் நவீன திரிபுவாதமும், சீர்திருத்தவாதமும், பலரகமான ட்ரொட்ஸ்கிய வாதங்களும், மறுபகுதியில் வகுப்புவாதமும் ஆகிய இந்த இரண்டுமே இலங்கையின் புரட்சிகர இயக்கத்தின் முக்கிய எதிரிகளாக உள்ளன என்பதை நாம் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். ஆகவேதான், நாம், உறுதியான இடைவிடாத தத்துவார்த்த இயக்கத்தை இந்த இரு முனைகளிலும் நடத்தி தொழிலாளி வர்க்கத்தையும் புரட்சிகர இயக்கத்தையும் அவற்றின் கெட்ட செல்வாக்கிலிருந்து மீட்டெடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆதலால், நாம் எமக்கு முன்னேயுள்ள வேலையைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். முதலாவதாக, எமது பிரதான எதிரியாகிய வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம் ஆகியவற்றை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஐக்கியப்படுத்தக்கூடிய பொது விரோதிக்கு எதிரான சக்திகள் அனைத்தையும், விசேஷமாக தொழிலாளர், விவசாயிகள், வாலிபர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரையும், தொழிலாள-விவசாய நட்புறவை இந்த ஐக்கிய முன்னணியின் அடித்தளமாகக் கொண்டு நாம் ஐக்கியப்படுத்த வேண்டும். மூன்றாவதாக, பொது விரோதியைத் தூக்கிவீசுவதற்கு வங்குரோட்டுத்தனமான பாராளுமன்றப் பாதையை நிராகரித்துவிட்டு, புரட்சிப்பாதைதான் ஒரே பாதையென்று அதன் வழியிலிறங்கவேண்டும். நான்காவதாக, நாம் சர்வதேசிய புரட்சிகர இயக்கத்தின் ஓர் அங்கம் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து, எப்பொழுதும் குறுகிய தேசியவாதத்தையும், வகுப்பு வாதத்தையும் நிராகரித்து, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, உலகம் முழுவதிலுமுள்ள புரட்சிவாதிகளின் கலங்கரை விளக்கமாகத் திகழும் ஒளி மிகுந்த செம்பதாகையாகிய மாசேதுங் சிந்தனையை உறுதியாக உயர்த்திப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

## IV

இப்பொழுது நாம், சர்வதேச மார்க்சிஸம் - லெனினிஸ இயக்கத்தின் ஒரு பகுதிக்குள் சரியானளவு குழப்பத்தை உண்டு பண்ணிய மிக முக்கியமான ஒரு விஷயத்தை விவாதிக்க வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இந்தக் குழப்பம் சிறிய அளவினதாயினும், எமது கீழ்மட்டத்திலும் பிரதிபலித்திருக்கிறது. ஆகவேதான், முழுதாகவும், வெளிப்படையாகவும் இதை நாம் விவாதிக்க வேண்டும்.

தொழிற் சங்கங்களுக்கும், தொழிற் சங்கப் போராட்டங்களுக்கும் புரட்சிகர அரசியல் போராட்டத்தோடு உள்ள தொடர்பின் பாத்திரம் தான் அந்த விஷயமாகும். முதலாளித்துவத்தின் ஆரம்ப காலத்தில் தொழிலாளர்கள் தொழிற் சங்கம் அமைக்க முயற்சி செய்தபோது முதலாளிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு ஆளாயினர் என்பது தொழிலாளி வர்க்கம் பொதுப்படையாக அறிந்த ஒரு விஷயமாகும். ஆனல், காலப்போக்கில் முதலாளி வர்க்கம் புத்திசாலியாக வளர்ந்தது. தொழிலாளர்களின் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையையும், கூட்டாகப் பேச்சு வார்த்தை நடத்தும் உரிமையையும், வேலைநிறுத்தம் செய்யும் அவர்களின் உரிமையையும் கூட அங்கீகரிப்பது தனது நலன்களுக்காகவே என்பதைஇந்தவர்க்கம் உணரத் தலைப்பட்டது. சிலவேளைகளில், இதற்கு மேலாகவும் அங்கீகாரம் வழங்கியது.தொழிலாளர்கள் தம்முடைய சொந்த,கூட்டாகப்போராடும் தகுதிக்குஎதிராக வழக்கறிஞர்களிடமும், தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கெட்டித்தனம் வாய்ந்த தொழிற் சங்கத் தலைவர்களிடமும் நம்பிக்கை வைக்கும்படி உற்சாகப்படுத்தப்பட்டு, அதற்கிசைய கைத்தொழில் கோர்ட்டுகள், தொழில் விசாரணை மன்றங்கள், சம்பள சபைகள் போன்ற தொடராய் அமைந்த மத்தியஸ்தத்திற்கு விடக்கூடிய முறைகள் கொண்ட ஸ்தாபனங்களை அறிமுகம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமைப்பு, தொழிலாளர் பணத்திலிருந்து உயர்ந்த சம்பளம்பெறும் தொழிற் சங்க அதிகார வர்க்கத்தினை உருவாக்கியது. தனி நலன்களுக்காக அமைந்த தொழிற் சங்க வேலை அவர்களுக்கு உயர்ந்த லாபம் அளிப்பதாக இருந்தது. அதன் விளைவு முதலாளி வர்க்கம் தொழிற் சங்க இயக்கத்திற்கு மரியாதை கொடுக்கத் தொடங்கியது மட்டுமன்றி, ஒரு தனிரக தொழிற் சங்கத் தலைமைப் பீடத்தை மிகுந்த மரியாதையுடனான ஒரு நிலைக்கு கொண்டுவந்தது. தன்னுடைய விதியை முதலாளித்துவ அமைப்புடன் இணைத்துள்ள, அதன் நலன்களில் அக்கறை கொண்ட இந்தத் தனிரக தொழிற் சங்க தலைமைப் பீடம், நன்கு சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களினதும், சிலவேளை ஒரு பரிவாரம் வழக்கறிஞர்களின் உதவியுடன் பெரிய கட்டிடங்களில் அமைந்த நன்கு அலங்கரிக்கப்பட்ட கந்தோர்களிலிருந்து இயங்கத் தொடங்கின.

## தொழிற் சங்க இயக்கம்

இது போன்ற ஊழல் நிறைந்த தொழிற் சங்க இயக்கமும் அதன் விளைவாக எழுந்த தொழிற் சங்க அரசியலும் பல நாடுகளில் அதிக தூரம் சென்றுள்ளன. இந்தப் புற்றுநோய் இலங்கையையும் தாக்கியிருக்கிறது. தனக்கு எதிரில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும் முதலாளியிலும் பார்க்க பணவசதி படைத்த தொழிற் சங்கத் தலைவர்களைச் சந்திப்பது இலங்கையில் கூட கஷ்டமான ஒரு விஷயமல்ல. இது போன்ற சீர்திருத்த தொழிற் சங்கவாதமும், தொழிலாளர் போராட்டங்களைப் பொருளாதாரப் போராட்டத்திற்குக் கட்டுப்படுத்தும் நிலையும்தான் தொழிலாளர்களிடையே நியாயமான அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. தொழிற் சங்க வேலையே படுபிற்போக்கானது; எனவே, அது முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும் என்ற துரதிர்ஷ்டவசமான உணர்வு எழுவதற்கும் இவையே காரணமாகும்.

மார்க்ஸ் காலத்திலிருந்து இருந்து வரும் இச் சர்ச்சை உண்மையில் ஒரு புதிய விஷயமல்ல. ஆனாலும், நாமும் இது குறித்து சிறிது ஆராய்வோமாக. எது எப்படியிருந்த போதிலும், சகல தொழிற் சங்க வேலையிலும் ஓரளவு சீர்திருத்தவாதக் கலப்பு இருக்கத்தான் செய்கிறது என்பதை நாம் முதலில் சொல்லியே ஆக வேண்டும். மார்க்ஸ் கூறியது போல, தொழிற் சங்கப் போராட்டங்களில் ஈடுபடும்போது நாம் விளைவுகளுக்காகப் போராடுகிறோமே தவிர காரணங்களுக்காக அல்ல. எல்லாத் தொழிற் சங்கப் போராட்டங்களும் தற்பொழுதிருக்கும் முதலாளித்துவ அமைப்பிற்குள் தொழிலாளர் நிலையை அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முயற்சி செய்வதால் அவற்றில் சீர்திருத்தவாத முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் எமது போராட்டங்களை பொருளாதாரப் போராட்டங்களோடு கட்டுப்படுத்திக்கொள்வோமேயானால் எமது நடவடிக்கைகள் கீழான தூய சீர்திருத்தவாத நிலைக்குத் தாழ்ந்து போவதுடன், எந்த முதலாளித்துவ அமைப்பின் கீழ் சிறு சலுகைகளைத் தொழிலாளி வர்க்கத்திற்குப் பெற்றுக் கொடுக்கிறோமோ அந்த முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கத் துணை செய்தவர்களாவோம்.

ஆனால், அதே நேரத்தில், தொழிலாளி வர்க்கம் தொழிற் சங்கப் போராட்டங்களைத் தவிர்க்க முடியாது என்பதையும் நாம் உணரவேண்டும். மனித சரித்திரத்தில் முதல் தடவையாக உழைப்பு சக்தி என்பது முதலாளித்துவத்தின் கீழ் ஒரு பண்டமாக ஆக்கப்பட்டுள்ளதோடு, இந்த முதலாளி வர்க்கம் உழைப்பு சக்தியின் விலையைப் பற்றி விவாதிக்க வேண்டியதின் அவசியத்தை தொழிலாளி வர்க்கத்தின் மேல் திணிக்கவும் முயற்சிப்பதிலிருந்து இது எழுகிறது. ஆகவே, இது உழைப்பு சக்தியை ஒரு பண்டமாக விற்கவேண்டிய அவர்களின் நிலையுடன் இணைந்த ஒரு விஷயமாகும்.

தொழிலாளர்கள் இப்போராட்டத்தை நடத்தாவிட்டால் ''விமோசனம் கடந்த நிலையில் சிதைந்துபோன உபயோகமற்ற கூட்டம் என்ற ஒரு கீழ்நிலைக்கு தள்ளப்பட்டு விடுவார்கள்'' என்று மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். ''முதலாளித்துவ உற்பத்தியின் பொது நோக்கு சம்பளத்தின் சராசரித் தரத்தைத் தாழ்த்துவதேயன்றி உயர்த்துவதல்ல; அல்லது, தொழில் சக்தியை ஓரளவு ஆகக் குறைந்த வரையறைக்குத் தள்ளுவதே'' என்று மார்க்ஸ் இன்னும் சுட்டிக் காட்டியதிலிருந்து இது எழுகிறது. ஆகவே மார்க்ஸ் கூறியபடி ''சம்பளத்தை உயர்த்தும் அவர்களின் முயற்சி நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதம் உழைப்பில் ஏற்படுத்தப்பட்ட பெறுமதியை நிலைநிறுத்தலேயாகும்.''

இது எல்லாத் தொழிலாளர்களும் விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு விஷயமாகும். இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்பு கிடைத்த சம்பளத்திலும் பார்க்க இன்றைய சம்பளம் இரண்டு மடங்காக, சிலவேளை மூன்று மடங்காகக் கூட அதிகரித்திருந்தபோதிலும், இந்த ''அதிகரித்த'' சம்பளத்தின் மூலம் ஒரு தொழிலாளி வாங்கக்கூடிய ஒரு ''கூடை பொருட்கள்'' அதே அளவிற்கு அதிகரித்து விடவில்லை. வேறுவார்த்தையில் கூறுவதானால் அவனுடைய உண்மையான சம்பளம் அநேகமாக ஒரு அளவிலேயே நிற்கிறது. ஆகவே, மார்க்ஸ் கூறியபடி, சம்பளத்தை உயர்த்துவதற்காக தொழிலாளர் நடத்தும் எல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களும், யதார்த்தத்தில், உழைப்பு சக்தியினுல் ஏற்படுத்தப்பட்ட பெறுமதியை அதே நிலையில் நிலைநிறுத்துவதற்கான முயற்சியேயாகும்.

## வர்க்கப் போராட்டத்தின் ஒரு உருவம்

ஆகவேதான், இத் தொழிற்சங்கப் போராட்டங்கள் தவிர்க்க முடியாதவை. மார்க்ஸ் அவற்றை என்றும் நிற்காத மூலதனத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து அல்லது சந்தையின் மாற்றத்திலிருந்து இடைவிடாது வெளிக்கிளம்பும் தவிர்க்கமுடியாத கொரில்லாபோர் என்ருர். மேலும், தொழிற்சங்கப் போராட்டமானது, தொழிலாளி வர்க்கம் அரசியல் போராட்டத்தில் முதிர்ச்சியடைவதற்கு வழிவகுக்கும் மிகவும் ஆரம்ப அமைப்புக் கொண்ட வர்க்கப் போராட்டமாகும். ஒரு தொழிலாளி அரசியல் போராட்டத்தின் அவசியத்தை முதலில் பொருளாதாரப் போராட்டத்தில் பங்கெடுப்பதன் மூலம் தான் அறிந்துகொள்கிருன். இந்தப் போராட்டங்களின் போதுதான் அவன், முதலாளி வர்க்க சுரண்டலைப் பாதுகாப்பது பாராளுமன்றம் அல்ல என்றும் ஆயுதப்படைகளை முக்கியமாகக் கொண்ட - ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுத்துவவாதிகள், பெரும் முதலாளித்துவவாதிகள் ஆகியோரால் அமைக்கப்பெற்ற அடக்குமுறை அரசு யந்திரமே என்றும் கற்றுக்கொள்கிருன். அதன் பின்புதான், சுரண்டும் வர்க்கங்களின் காவல் நாய்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகளிலே உண்மை அதிகாரம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்கிருன். இது போன்ற பொருளாதாரப் போராட்ட அனுபவங்களிலிருந்தே, சில காலகட்டத்தில், பொருளாதாரப் போராட்டம் சுரண்டலை ஒழிக்கும் போராட்டமான அரசியல் போராட்டமாக மாற்றப்பட வேண்டும் என்பதை தொழிலாளி வர்க்கம் கற்றுக்கொள்கிறது.

தொழிலாளி வர்க்கத்தை அரசியல் மயப்படுத்தும் இந்த வேலை போராட்ட அனுபவங்களிலிருந்தும், வங்குரோட்டுப் பாராளுமன்ற பாதையைப் போதித்து, தொழிற் சங்க அரசியலைக் கடைபிடிக்கும் தொழிலாளி வர்க்க எதிர் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் திரிபுவாதம்,சீர்திருத்தவாதம்,பலதரப்பட்ட ட்ரொட்ஸ்கியவாதங்கள், நவீன திரிபுவாதம் ஆகியவற்றிற்கு எதிராக தத்துவார்த்தப் போராட்டம் நடத்துவதின் மூலமுமே செயல்படுத்தப்பட முடியும்.

தொழிற் சங்கப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தாமலிருப்பதற்கு, அல்லது அவற்றிலேயே ஒரேயடியாக மூழ்கிப் போகாமல் இருப்பதற்கு எமது அங்கத்தவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது எமது கடமையாகும். பொருளாதாரப் போராட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தை அவ்வப்போது நடாத்தும்பொழுது அவர்கள் விளைவுகளுக்கு எதிராகப் போராடுகிறார்களே தவிர விளைவுகளின் காரணங்களுக்காக அல்ல என்பதையும், அவர்கள் இயக்கத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறார்களே தவிர அதன் திசையைத் திருப்பவில்லை என்பதையும், நோயைத் திரைபோட்டு மறைக்கிறார்களே தவிர குணப்படுத்தவில்லை என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

முதலாளிகளுக்கு எதிரான பொருளாதாரப் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வதன் மூலம் தொழிலாளர்களை அரசியல் மயப்படுத்தக் கற்றுக்கொடுப்பது இதனால்தான் மிகவும் அவசியமானதாகும். உபரி பெறுமதி உற்பத்திக்காக உழைப்பு சக்தியைக் குறைந்த விலையில் விற்க தொழிலாளர்களை எதிர்பார்க்கும் சுரண்டல் அமைப்பை ஒழித்துக் கட்டுவதற்கான அரசியல் போராட்டமாக ஒரு நேரத்தில் மாற்றுவதன் அவசியத்தை உணர்த்தும் இந்தப் பொருளாதாரப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் ஒரு உருவமாகும்.

இதன் சரியான தன்மையை நாம் தெளிவாக மனதிலே பதித்துக்கொள்ள முடியுமாயிருந்தால்—அதாவது நாம் தொழிற்சங்க வேலையில் ஈடுபடுவதன் காரணம் தொழிலாளர்களின் அரசியல் உணர்வை உயர்த்துவது-பொருளாதார, தத்துவார்த்த போராட்டங்கள் மூலம் அவர்களின் வெறுப்புணர்வை ஆழமாக்கி, பொருளாதாரப் போராட்டத்தை அரசியல் போராட்டமாக மாற்றுவதன் அவசியத்தை உணரச் செய்வது, அதாவது முதலாளித்துவ கட்டுக்கோப்பிற்குள் தமது நிலையை விருத்தி செய்வதற்கான போராட்டத்தை, முதலாளித்துவ சுரண்டலை முற்று முழுதாக அழித்தொழிப்பதற்கான போராட்டமாக மாற்றுவது - மேலும் எமது நேரத்தில் அதிகமான அளவு நேரத்தை விரயம் செய்யாமல் இருந்தால், அல்லது தொழிற் சங்கப் போராட்டத்திற்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்தால், அதாவது எமது எல்லா நடவடிக்கைகளிலும் அரசியலை உயர் மட்டத்தில் வைத்தால்—நாம் புரட்சிகர தொழிற் சங்க வேலை செய்கிறவர்கள் ஆவோம். பொருளாதாரப் போராட்டம் உயர்ந்த அரசியல் போராட்டத்திற்கான அத்திவாரத்தைத் தயார் செய்வதாக இருக்கவேண்டும்.

இதைச் சரியாகப் புரிந்துகொண்டால் தொழிற் சங்க வேலையே பிற்போக்கானதும், தேவையற்றதும் என்று பழித்துரைக்கும் இடதுசாரி சீர்குலைவுவாத நோக்கத்திற்கு இடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. உலகிலுள்ள எல்லாவற்றின் தன்மைகளும்போல் தொழிற் சங்க வேலையிலும் இரண்டு தன்மைகள் இருக்கின்றன. ஒன்று நல்லது, மற்றது கெட்டது. எம்மைப் பொறுத்தவரையில் புரட்சிகர தொழிற் சங்க வேலைக்கும், சீர்திருத்தவாத தொழிற் சங்க வேலைக்கும் இடையில் பாகுபாடுகாண நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் முன்னையதை ஆதரித்து பின்னையதை எதிர்க்கிறோம்.

தொழிற் சங்கம் வகிக்கும் பாத்திரம் பற்றிக் கூறும்பொழுது இந்தச் சர்ச்சை மார்க்ஸ் காலத்திலிருந்து தொடர்ந்து வந்திருக்கின்றது என்று நாம் முன்பு கூறியிருக்கிறோம். ஜோன் வெஸ்டென் என்னும் ஓர் ஆங்கிலேயத் தொழிலாளி சர்வதேச உழைப்பாளிகள் சங்கப் பொதுச் சபையில், உயர்ந்த சம்பளங்கள் தொழிலாளர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்துவிட முடியாது என்றும், தொழிற் சங்கங்கள் கெட்ட விளைவுகள் உள்ளதாகக் கருதப் படவேண்டும் என்றும் தனது கருத்தை முன்வைத்திருந்தார். 1865ம் ஆண்டு ஜுன் மாதம் 20—27ம் திகதிகளில் நடந்த சர்வதேச உழைப்பாளிகள் சங்க பொதுச் சபையில் இரண்டு நாள் கூட்டத்தின்போது, மார்க்ஸ் இதற்குப் பதிலுரைக்கும் முகமாக ஓர் உரை நிகழ்த்தினர். இவரின் உரை, மதிப்பு, விலை, லாபம் என்ற தலைப்பில் ஓர் தனிப் பிரசுரமாக ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது.

மார்க்ஸின் இந்த உரையில் அடங்கியிருக்கும் கருத்துக்களின் முக்கியத்துவம் கருதியும், இன்றைய பிரச்சினைக்கு அதனோடு உள்ள சம்பந்தம் கருதியும், அவரின் முக்கியத்துவம் நிறைந்த இந்தப் பேச்சின் முடிவில் அமைந்துள்ள சில பந்திகளை அப்படியே இங்கு தருகின்றோம்.

''நவீன கைத்தொழிலின் அபிவிருத்தி பாட்டாளிக்கு எதிராகவும் முதலாளிக்கு ஆதரவாகவும் தராசை துரிதகதியில் திருப்பிவிடும் தன்மை உடையது என்றும் அதன் விளைவான முதலாளித்துவ உற்பத்தியின் பொதுவான நோக்கு சம்பளத்தின் சராசரித் தரத்தை உயர்த்துவதாக அல்லாமல் தாழ்த்துவதாகவே உள்ளது, அல்லது தொழிலின் பெறு திியை முடியுமான அளவு அதன் குறைந்த பட்ச வரையறைக்குத் தள்ளுவதே'' என்றும் விளக்குவதற்கு இச் சில கருத்துக்கள் போது ானதாக இருக்கின்றன. இந்த அமைப்பில் உள்ள விஷயங்களின் தன்மை இப்படியாயிருக்கும் பொழுது, தொழிலாளி வர்க்கம் மூலதனத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பைக் கைவிடவேண்டும் என்றும், அவர்களின் தற்காலிக விருத்திற்குச் சாதகமாக அவ்வப்பொழுது கிடைக்கும் சந்தர்ப்பங்களிலிருந்து பெறக்கூடிய நன்மைக்கான முயற்சியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட வேண்டும் என்றும் கூறுவது சரியா? அவர்கள் அப்படிச் செய்தால், விமோசன நிலைகடந்த, சீர்குலைந்த, பரிதாபத்திற் குரிய மனிதக் கூட்டம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார் கள். **சம்பளத் தரத்திற்கான அவர்களின் போராட்டம் முழு சம்பள அமைப்பிலிருந்தும் பிரித்தெடுக்க முடியாத சம்பவங்கள் என்றும், 100க்குத் 99 சந்தர்ப்பங்களில் சம்பளத்தை உயர்த்துவதற்கான அவர்களின் முயற்சி ஏற்படுத்தப்பட்ட தொழிலின் பெறுமதியை நிலைநிறுத்துவதற்கான முயற்சியே என்றும், அவற்றின் பெறு மதியை முதலாளித்துவவாதியுடன் விவாதிக்க வேண்டிய அவசியம் அவற்றைச் சரக்காக விற்கவேண்டிய அவர்களின் நிலைமையுடன் இணைக்கப்பட்டிருப்பதே என்றும் உங்களுக்குக் காட்டியிருப்பதாக நினைக்கிறேன்.** மூலதனத்திற்கெதிரான தினசரி மோதலில் அவர் கள் கோழைத்தனமாக விட்டுக்கொடுப்பார்களேயானால் பெரும் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு தங்களை நிச்சயமாகத் தகுதியற்ற வர்களாக ஆக்கிவிடுவார்கள்.

''அதே நேரத்தில் சம்பள அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது அடிமைத்தனத்திற்கு முற்றிலும் புறம்பாக தொழிலாளி **வர்க்கம் இத் தினசரிப் போராட்டத்தின் இறுதி வேலைத் திட்டத்தை தங்களுக்குள் மிகைப்படுத்திக் கொள்ளக்கூடாது;** விளைவுகளுக்கான காரணங்களுடன் அன்றி விளைவுகளுடன் அவர்கள் போராடுகிறார் கள்; கீழ்நோக்கி இயங்குவதைக் கட்டுப்படுத்தச் செய்கிறார்களே தவிர அதைத் திசை திருப்பிவிடவில்லை; நோயைத் திரைபோட்டு மறைக்கிறார்களே தவிர குணப்படுத்தவில்லை என்பதையும் அவர் கள் மறந்துவிடக்கூடாது. ஆகவே, என்றுமே நிற்காத மூல தனத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து அல்லது சந்தையின் மாற்றத்தி லிருந்து தொடர்ச்சியாகக் கிளம்பும் தவிர்க்கமுடியாத கொரில் லாச் சண்டையில் அவர்கள் ஒரேயடியாக மூழ்கிவிடாமல் இருக்க வேண்டும். தற்போதைய அமைப்பு, பல துன்பங்களைத் திணிக் கும் அதேவேளையில், சமூகத்தின் பொருளாதார புனர்நிர்மா ணத்திற்கான பொருள் நிலைமைகளையும், சமூக அமைப்புகளையும் உற்பத்தி செய்கிறது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ''நியாயமான நாள் வேலைக்கு ஏற்ப நியாயமான நாள் சம்பளம்'' என்ற பழைய கொள்கைக்குப் பதிலாக, ''சம் பள அமைப்பை அழித்தொழித்தல்'' என்ற புரட்சிகர புது மொழியை தமது பதாகைகளில் பொறித்துக்கொள்ள வேண்டும்.

''எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு நியாயம் அளிக்கும் முகமாக நான் கொடுக்கவேண்டியிருந்த இந்த நீண்ட களைப்பை உண்டாக் கக்கூடிய விளக்கத்திற்குப் பின்பு, இப்பொழுது கீழ்க்கண்ட தீர் மானங்களைப் பிரேரிப்பதன் மூலம் இதை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக, சம்பள விகிதத்தில் ஒரு பொது உயர்வு லாப விகிதத்தில் ஒரு பொது வீழ்ச்சியை விளைவிக்கும் என்ருலும் பொருட்களின் விலையைப் பாதிக்காது.

இரண்டாவதாக, முதலாளித்துவ உற்பத்தியின் பொது நோக்கம் சம்பளத்தின் சராசரித் தரத்தைத் தாழ்த்துவதே தவிர உயர்த்துவதல்ல.

மூன்ருவதாக, தொழிற்சங்கங்கள் மூலதன ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பின் மத்தியஸ்தானங்களாகவே நன்கு வேலை செய்கின்றன. தமது சக்தியை தவருன முறையில் பிரயோகிப்பது காரணமாக அவைகள் ஒரு பகுதியில் தோல்வி அடைகின்றன. தமது அணிதிரட்டப்பட்ட சக்திகளை தற்போதைய அமைப்பையே மாற்றுவதற்கு பிரயோகிக்காமல், தொழிலாளி வர்க்கத்தின் இறுதி விடுதலைக்கு அதாவது சம்பள அமைப்பை அழிப்பதற்கு பிரயோகிக்காமல், தற்போதைய அமைப்பின் விளைவுகளுக்கு எதிராக கொரில்லா போர் நடத்துவதற்கு கட்டுப்படுத்துவதாலேயே அவைகள் பொதுப்படையாக தோல்வியடைகின்றன.

## இருவழி மாற்றங்களையும் அனுமதிக்கக் கூடாது

மார்க்ஸின் அறிவு நிறைந்த இந்த வார்த்தைகளை நாம் ஜீரணித்து சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். இடதுசாரி வழி மாற்றத்தையோ அல்லது வலதுசாரி வழி மாற்றத்தையோ நாம் எங்களுக்குள் அனுமதிக்கக் கூடாது. அதாவது, புரட்சிகர உணர்வுடன் தொழிற் சங்க வேலை செய்ய மறுக்காத, அதே வேளையில் முதலாளி வர்க்கமும் அதன் அரசாங்கமும் எங்கள் மேல் என்ருவது திணிக்கப்பட வேண்டி இருக்கும் பலாத்காரத்திலிருந்து பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய குறுகிய எல்லைகளுக்குள் எமது தொழிற் சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள இடங்கொடுக்கக் கூடாது.

தொழிலாளி வர்க்கத்தின் குறைந்த சம்பளத்திற்கும் துயரமான வாழ்க்கைத் தரத்திற்கும் காரணம் ஏகாதிபத்தியவாதிகளினுலும் முதலாளித்துவவாதிகளினுலும் நடத்தப்படும் கடும் சுரண்டலே என்பதை கற்றுக்கொடுக்கவேண்டும். வெளிநாட்டு ஏகாதிபத்திய தனி நலன்கள் எமது பொருளாதாரத்தைத் தொடர்ந்து அடிமைப்படுத்தி வருவதன் காரணமாக எழும் தொடர்ச்சியான பொருளாதார குழப்பங்கள் காரணமாக இந்த நிலை மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. ஆகவே வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெரும் முதலாளித்துவம் ஆகியவற்றைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி வீசாவிட்டால் தொழிலாளி வர்க்கம் தனது பொருள் நிலைமைகளை சிறிய அளவிலேனும் விருத்தி செய்துகொள்ள முடியாது என்பதையும் போதிக்கவேண்டும்.

## தொழிலாளி வர்க்கத்திற்கு போதிக்க வேண்டியவை

இவற்றுடன் கீழ் வருவனவற்றையும் தொழிலாளி வர்க்கத்திற்கு நாம் சொல்லிக் கொடுக்கவேண்டும். நாம் வசிப்பது வர்க்க சமுதாயத்தில். இந்த வர்க்க சமுதாயத்தில் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கிவைத்துச் சுரண்டுகிறது. இந்த நிலை வர்க்கப் போராட்டத்திற்கு எழுச்சி கொடுக்கிறது. அடக்கியொடுக்கி நசுக்கப்படும் வர்க்கத்தை தொடர்ந்து அடக்குவதற்காக அடக்கும் வர்க்கம் பெரும் செலவில் அரசு என்னும் யந்திரத்தைக் கட்டி வளர்த்திருக்கிறது. இந்த அரசு யந்திரத்தின் முக்கியமான அங்கம் ஆயுதப் படைகளே. இந்த அரசு யந்திரத்தின் பாதுகாப்பினுல்தான் சுரண்டல் தொடர்ந்து நடக்கிறது. தொழிலாளி வர்க்கமும் மற்றும் அடக்கப்படும் வர்க்கங்களும் தங்கள் அடிமை நிலையையும் அடக்கு முறையையும் அகற்றவேண்டுமானுல் சுரண்டுவோரின் காவல் நாயாகச் செயல்படும் இந்த அடக்குமுறை அரசு யந்திரத்தைத் தகர்த்து அதனிடத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று மார்க்ஸினுல் கூறப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் அரசு யந்திரத்தை அமைக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானுல் பலாத்காரப் புரட்சியின் மூலமே இதைச் செய்ய முடியும்; பாராளுமன்றத்தில் சமாதான மாற்றத்தினுல் அல்ல.

ஆனபடியால்தான், எமது கடந்த மகாநாட்டில், கடும் முயற்சியின் மூலம் அங்கத்தவர்களை அரசியல் மயப்படுத்தும்படியும், சீர்திருத்த தொழிற்சங்கவாதம் என்ற கடும் சேற்றிலிருந்து அவர்களை வெளியே எடுக்கும் படியும், புரட்சிகர உணர்வுடன் தொழிற்சங்க அலுவல்களில் ஈடுபட அவர்களை வழி நடத்தும்படியும் எமது எல்லாச் சங்கங்களுக்கும் அறைகூவல் விடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தோம்.

இந்தத் தீர்மானங்கள் எல்லா அங்கத்தவர்களாலும் ஒரே மாதிரி அமுல்நடத்தப்பட்டிருக்கின்றன என்று கூறமுடியாது. சில சங்கங்கள் நல்ல முன்னேற்றமடைந்திருக்கின்றன; மற்றவை முன்னேற்றமடையவில்லை. இந்த வேறுபாடு சீர்திருத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்போக்கு வாதிகளின் தத்துவப் பிரச்சாரம்

தினமும், ஒவ்வொரு மணித்தியாலமும் தொழிலாளர்களின் மனதைக் கெடுப்பதற்கென பிற்போக்குவாதிகளினால் நடத்தப் படும் பரந்த தத்துவார்த்த இயக்கத்தைப் பற்றி உங்களின் கூரிய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். ஊழல் நிறைந்த பிரச்சார சாதனமான பூர்ஷுவா பத்திரிகை மூலமும், வானொலி, திரைப்படங்கள், பிரச்சார வகுப்புகள் ஆகியன மூலமும் இது நடைபெறுகின்றது.

எமது உள்ளங்கள் எந்தக் காலமும் வெற்று நிலையில் இருந்த தில்லை. முதலாளித்துவ கருத்துக்களோ அல்லது பாட்டாளி வர்க் கக் கருத்துக்களோ அவற்றில் நிறைந்திருக்கும். இந்த இரண்டு தத்துவங்களுக்குமிடையில் சமாதான சகஜீவனம் என்ற எண்ணத் திற்கு இனிமேலும் எமது மூளையில் இடமே இல்லை. இரண்டில் ஒன்று வெற்றி பெற்றே தீரும். தொழிலாளர்களின் மூளைகளில் பாட்டாளி வர்க்க தத்துவம் வெற்றி பெறுவதற்கு உதவுவது எமதுகடமையாகும்.

அரசியல் வகுப்புக்கள், விரிவுரைகள், எமது வாரப் பத்திரி கைகளான ''கம்கறுவா'', ''தொழிலாளி'' ஆகியவற்றை ஒழுங் காகப் படித்தல், மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையை தீவிரமாகவும் ஒழுங்காகவும் படித்தல், எல்லாவற்றிற்கும் மேலாக வர்க்கப் போராட்டத்தில் கலந்து கொள்ளல் ஆகியவற்றின் மூலமே இதைச் சாதிக்க முடியும். எமது கிளைகள் உள்ள பல தொழிற்சாலைகளிலும், டிப்போக்களிலும், தோட்டங்களிலும் எமது வாரப் பத்திரிகைகள் விற்பனை நடைபெறாமல் இருப்பது மனவருத்தத்திற்குரிய ஒரு விஷயமாகும். இது உடனடியாகத் திருத்தப்படவேண்டும். எம்மை எல்லாத் திக்குகளிலும் சூழும் இந்த பிற்போக்கு தத்துவார்த்த இயக்கத்திற்கு எதிராகப் போராடுவதற்கு எம்மிடமிருக்கும் தத்துவார்த்த ஆயுதங்கள் நாம் அச்சிடும் இவ்வாரப் பத்திரிகைகளும், புத்தகங்கள், சிறு பிரசுரங் கள், துண்டுப் பிரசுரங்களுமேயாகும். எல்லாச் சங்கக் கிளைகளும் எமது வாரப் பத்திரிகைகளான ''கம்கறுவ''வையும் ''தொழி லாளி''யையும் விற்பனை செய்வதை தங்கள் கடமைகளில் முக்கிய மானதாகக் கொள்ளவேண்டும்.

## தொழிற் சங்க ஐக்கியம்

இப்பொழுது, தொழிற் சங்க ஐக்கியத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். இலங்கையில் தொழிற் சங்க இயக்கத்தின் சாபக்கேடு அதன் ஐக்கியமின்மையே, இதன் காரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகத்தான், நியாயமான அளவு இயக்கரீதியாகக் கட்டி வளர்க்கப்பட்டிருக்கின்ற பொழுதிலும் தொழிலாளி வர்க்கம், முதலாளிகளிடமிருந்து தமது கோரிக்கைகளைப் பெற முடியாமல் இருக்கின்றது. எவ்வளவுதான் ஒரு முனைவாத வித்தியாசங்கள் இருந்தபோதிலும் தொழிலாளர் தமது பொருளாதார கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு முன்னோடியாக அவர்கள் ஐக்கியப்படவேண்டியது அவசியம் என்று சொல்லிவந்திருக்கிறோம். அதனால்தான், இலங்கை தொழிற் சங்க சரித்திரமே என்றும் கண்டிராத 21 கோரிக்கைகளுக்குப் பின்னால் ஏற்பட்ட ஐக்கிய இயக்கத்தை ஆரம்பித்து வைப்பதற்கு முன்னின்று உழைத்தோம்.

சமசமாஜ தலைமைப்பீடமும், கெனமன் திரிபுவாத கும்பலும் இந்த ஐக்கியத்தைத் தமது சொந்த சந்தர்ப்பவாத காரணங்களுக்காக உடைத்தெறிந்ததும், அதன் விளைவாக எல்லாத் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கும் அவர்கள் ஒரு தடைக்கல்லாக அமைந்ததும் இன்னும் 1967ம் ஆண்டு தனியார் துறை வேலைநிறுத்தத்தையும், 1968ம் ஆண்டு அரசாங்கதுறை வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்ததும் நாம் என்றுமே புறக்கணிக்க முடியாத பாடங்களாக அமைந்திருக்கின்றன. இந்தக் காலங்களில், விசேஷமாக 1967ம் ஆண்டு தனியார்துறை வேலை நிறுத்தத்தின்போது ஐக்கியம் ஏற்படுத்துவதற்காக நாம் எவ்வளவு பிரயத்தனங்கள் செய்தோம் என்பதையும், முக்கூட்டுத் தொழிற் சங்கத் தலைவர்கள் முக்கியமாக அவற்றில் கெனமன் திரிபுவாதக் கும்பலைச் சேர்ந்தோர் எமது முயற்சிகளை எவ்வளவு தூரம் தூக்கி வீசினார்கள் என்பதையும் எமது அங்கத்தவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். இதுதான் அந்த வேலை நிறுத்தத்தின் தோல்விக்குக் காரணம் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். தமது பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதன் அவசியத்தை உணரத் தலைப்பட்டிருக்கும் எல்லாத் தொழிலாளர்களின் ஐக்கியத்திற்கு இன்றும் நாம் முன்னிற்கும் அதேவேளையில்–இந்த ஐக்கியப்படுத்தும் முயற்சியை வேலைநிறுத்த காலங்களின் போது பலதரப்பட்ட அரசியல் கருத்துக்கள் கொண்ட தொழிலாளர்களுக்கிடையில் முன்கொண்டு செல்லத் தயாராயிருக்கும் அதேவேளையில்—லெனின் அன்று தனது கால ரஷ்யாவைப் பற்றிக் கூறும் பொழுது சுட்டிக்காட்டிய, ''தற்போதைய சமூகக் கட்டுக்கோப்பிற்குள் தொழிலாளர்களின் பௌதீக நிலைமைகளை எப்படி அபிவிருத்தி செய்யமுடியும் என்பது சம்பந்தமாக கூட 'அரசியல் கருத்து வேறுபாடுகள்' புகுத்தப்பட்டிருக்கின்றன'' என்ற அவரின் கூற்றை நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த அபிவிருத்தியை நாம் புறக்கணித்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புத் தேவை

சமுதாயத்தில் புரட்சிகர மாற்றத்தை விரும்பாத சமசமாஜக் கட்சித் தலைவர்களும், கெனமன் திரிபுவாதக் கும்பலும், ''பாட்டாளி வர்க்க போராட்டத்தை மழுங்கடிக்ககூடிய'' தன்மை வாய்ந்த தொழிற் சங்கப் போராட்டங்களை விரும்புவது இயற்கையானதே. இந்த அடிப்படையில் நாம் ஐக்கியத்தை விரும்ப முடியாது. அதேநேரத்தில் பாட்டாளிவர்க்க விடுதலைக்கு உத்வேகம் கொடுக்கக்கூடிய போராட்டங்கள் கொண்ட தொழிலாளர் ஐக்கியத்தைத் தவிர்த்து தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மட்டும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஒற்றுமையை இவர்கள் முன்னணியில் வைப்பதற்கு எதிராக நாம் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

தொழிற் சங்க இயக்கத்தைப் பிளவுபடுத்தும் ஆழ்ந்த தொழிற் சங்க பிளவுகளுக்கிடையே கீழ்மட்டத்திலிருந்துதான் ஐக்கியம் உருவாக முடியும், மேல்மட்டத்திலிருந்தல்ல. **1963-64**ல் நடந்தது போன்ற ஒரு ஐக்கியத்தை தலைவர்களிடையே இப்பொழுது நினைத்துப் பார்ப்பது வெறும் கனவாகும். தொழிலாளர்கள் ஐக்கியத்தை தமது கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள், பலதரப்பட்ட தொழிற் சங்க மத்தியஸ்தான தலைவர்களினதும் கடந்தகால நடவடிக்கைகளையும், அவர்களின் வர்க்க குணும்சங்களையும் துருவி ஆராய்ந்து தமது நெரிவைச் செய்ய வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தைத் தொடர்ச்சியாகக் காட்டிக் கொடுத்து, அதன் உழைப்பைச் சுரண்டி வாழும் சமசமாஜக் கட்சித் தலைமையும், கெனமன் திரிபுவாதக் கும்பலும், தொண்டமானும் இவர்களைப் போன்றோரும் சுரண்டலை ஒழித்துக் கட்டுவதற்கு தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை அளிக்க முடியுமா? இதற்குத் தெளிவான பதில் ''இல்லை'' என்பதே.

ஆதலால் தான் ஒரு புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் புரட்சிகர நடவடிக்கைக்காக தொழிலாளி வர்க்கத்தைக் கீழ் மட்டத்திலிருந்து ஐக்கியப்படுத்துவதற்கான பெரும் வேலையைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரி அழைப்பு விடுகிறோம். அவர்களுடைய நலன்களே இதில் அடங்கியுள்ளதால் வேறு எந்த வழிகளும் அவர்களுக்கு வெற்றியைத் தேடித்தர முடியாது.

அதே வேளையில், தொழிலாளி வர்க்கத்தின் முழு ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் எமது முயற்சியின் ஒரு அங்கமாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பலத்தை மேலும் கட்டி வளர்ப்பதற்கு எம்மாலான எல்லா முயற்சிகளையும் நாம் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V

எமது பரிசீலனைக்குள்ளாகியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், இயக்க முனையிலும் எமது அங்கத்தவர்களுக்கு பொருளாதாரக் கோரிக்கைகளை வென்றெடுப்பதிலும் நாம் குறிப்பிடத்தக்க அளவு வெற்றிகள் பெற்றிருக்கிறோம் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறோம். அவைகளில் சில 5-8-69ல் கூட்டப்பட்ட விசேஷ மாநாட்டின்போது உங்களுக்கு அறிவிக்கப்பட்டன.

இலங்கை சினிமா பிலிம் ஸ்டுடியோ ஊழியர் சங்கத்தினால் தமது அங்கத்தினர்களுக்கெனப் பெறப்பட்ட வெற்றி இந்த வெற்றிகளில் பெரியதாகும். 1967ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் திகதி இந்தச் சங்கம் பெரும் சினிமா கம்பெனிகளுடன் ஒரு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டது என்பது நினைவிருக்கலாம். இந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி, ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் கொழும்பு பாவனையாளர் அட்டவணையின் காலத்திற்குக் காலம் உயர்ந்துவரும் நிலைக்குத் தக்கவாறு கணிக்கப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தக் கணிப்பீடு ஊழியர்கள் வருடாவருடம் பெறும் சம்பள ஏற்றம் உட்பட்ட அடிப்படைச் சம்பளத்திலிருந்தே பெறப்படும். அத்தோடு, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல விசேஷ வாழ்க்கைச் செலவு அலவன்சும் வழங்கப்படவேண்டும். இதன் விளைவாக இந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் அடங்கிய ஊழியர்கள் ரூபா 25/-லிருந்து சில இடங்களில் ரூபா 85/-வரை சம்பள உயர்வாகப் பெற்றனர்.

## சினிமாத் துறையில்

இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இந்தச் சங்கம், விகிதர் வேலை செய்யும் ஊழியர்கள் போன்று எல்லாத் துறைகளிலும் எல்லா வசதிகளும் சரிசமமாகத் தமது அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தியது. முதலாவதாக இந்தக் கோரிக்கை சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டெட்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் இந்தக் கோரிக்கையை நிராகரித்ததன் விளைவாக சிலோன் தியேட்டர்ஸ் ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஒன்று, இரண்டு வாரங்களாக நடைபெற்றது. நிர்வாகத்தினர் பேச்சு வார்த்தையை திரும்பவும் ஆரம்பிப்பதற்கு அளித்த உறுதியின் பின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. அதன் விளைவாக எமது சங்கத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டெட்டிற்கும் இடையில் கூட்டு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சிலோன் தியேட்டர்ஸ் லிமிட்டெட்டில் வேலை செய்யும் ஊழியர் அனைவருக்கும் புதிய குறைந்தபட்ச, கூடியபட்ச சம்பளமும், பெரும் வருடாந்த சம்பள உயர்வும் வழங்கப்பட்டன. மேலும் 7 நாட்கள் மெடிகல் லீவையும் இரண்டு நாட்கள் சம்பளத்துடனான பொது விடுமுறை நாட்களையும் வென்றெடுத்தனர். முதலாளிமார்களினதும், ஊழியர்களினதும் பிராவிடன்ட் நிதிக்கு மாதம் மாதம் வழங்கும் தொகை மேலும் 2% ஆக அதிகரிக்கப்பட்டது. விகிதர்களுக்குப் போல இந்த ஊழியர்களுக்கும் கடந்த கால சேவைக்குத் தக்கவாறு ஓய்வுகால தொகை வழங்கப்படுவதற்கும் உடன்பாடு செய்யப்பட்டது.

மற்றைய சினிமா முதலாளிமார்களையும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு சங்கம் முயற்சித்தபோதிலும் அம் முயற்சி வெற்றியடைய முடியாமல் போயிற்று. தொழில் திணைக்களத்தின் தலைமையின் கீழும், வேலைநிறுத்தப் பயமுறுத்தலினூடாகவும் சிலோன் தியேட்டர்ஸ் முதலாளிமாருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அடங்கியதுபோல விதிகள் எல்லாம் அடங்கிய ஓர் ஒப்பந்தம் ஒரு வருட காலத்தின் பின்பு கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் ஒருவிதி தொழிலாளர்களுக்கு மிகவும் நலன் அளிப்பதாக அமைந்திருந்தது. அது ஓய்வு காலத்தொகை சம்பந்தப்பட்டதாகும். இந்த இரண்டாவது ஒப்பந்தத்தின்கீழ், பிராவிடன்ட் நிதி ஆரம்பிக்கப்பட்ட காலத்திற்கு முன்பு சேவை செய்த அங்கத்தவர்களுக்கு அந்தக் காலத்திற்கு ஒரு வருடத்திற்கு ஒரு மாத முழுச் சம்பளம் என்ற விகிதத்தில் அவர்கள் ஓய்வுபெறும் வருட சம்பள அடிப்படையில் இளைப்பாறு காலப் பணம் வழங்குவதற்கு முதலாளிமார் ஒத்துக்கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின்கீழ் அடங்கிய கம்பனிகள் சினிமாஸ் லிமிட்டெட், சிலோன் என்டர்டெயின்மன்ட்ஸ் லிமிட்டெட், லிபர்ட்டி சினிமா லிமிட்டெட், சவோய் தியேட்டர்ஸ் லிமிட்டெட், நியூ ஒலிம்பியா தியேட்டர்ஸ் லிமிட்டெட், ஓடியன் சினிமா லிமிட்டெட் ஆகியனவையேயாகும்.

இவை யாவற்றையும் ஒன்றாக எடுத்து நோக்குவோமேயானால், 1962ம் ஆண்டு கைத்தொழில் கோர்ட்டின் தீர்ப்பின் மூலமாகவும், மூன்று கூட்டு ஒப்பந்தங்கள் மூலமாகவும் சினிமாத் தொழிலாளர்கள் பெற்றுள்ள நன்மைகள் தொழிற் சங்க இயக்கத்திலே எந்தவொரு பகுதியினரும் பெற்றிராத மிகப் பெரும் பொருளாதார வெற்றிகளாகத் திகழ்கின்றன என்பது எமது அபிப்பிராயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போஞர்ஸ், மற்றும் கம்பெனிகளில்

போஞர்ஸ் லிமிட்டெட், சில்வர் கிரவுண் பிரிண்டர்ஸ் லிமிட்டெட், சிலோன் டயர் கிராப்ட் லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களில் 1967 டிசம்பர் பொது வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நிர்வாகத்தினர் மேற்கொண்ட பழி வாங்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட எல்லாத் தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை பெற்றுச் கொடுப்பதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம் என்பதைக் கூற மகிழ்வுறுகின்ருேம். போஞர்ஸ் லிமிட்டெட் வழக்கிலே, தொழிலாளர்கள் வேலையற்றிருந்த நாட்கள் அரைவாசிக்கு சம்பளம் பெற்றனர்; அதேவேளையில், சில்வர் கிரவுண் பிரிண்டர்ஸ் லிமிட்டெட் வழக்கிலே, தொழிலாளர்கள் வேலையற்றிருந்த நாட்கள் அனைத்துக்குமே சம்பளம் பெற்றனர். சிலோன் டயர் கிராப்ட் லிமிட்டெட் வழக்கில், வேலை நீக்கஞ் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கவோ அல்லது ஆகக்கூடிய நஷ்டஈட்டுத் தொகையை அளிக்குமாறு தொழில் கோர்ட் முதலாளியைப் பணித்துள்ளது. இந்த நஷ்டஈட்டுத் தொகையைப் பொறுத்த மட்டில், 20 ஆண்டுகள் சேவை உள்ள தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு ரூபா. 10,000/- வரை கிடைக்கும். இத் தீர்ப்புக்கு எதிராகக் கம்பனி அப்பீல் செய்துள்ளது. எனினும், இறுதி வெற்றியில் எமக்கு நம்பிக்கையுண்டு.

இந்த வருட கடைசி அரையாண்டில் போஞர்ஸ் லிமிட்டெட்டில் தொழிலாளி - முதலாளி உறவு மிகவும் மோசமான நிலையை அடைந்தது.

மூன்று வருடங்களாகப் பிராவிடன்ட் நிதிக்குரிய பாக்கியை கொடுக்காமல் இருந்தமை, வேலை பழகுவோர்க்கு நாணய மதிப்பிறக்க அலவன்ஸைக் கொடுக்காமல் இருந்தமை, ஜெனரல் மானேஜருக்கு ஊழியர்களிடையே செல்வாக்கின்மை ஆகிய எல்லாமாகச் சேர்ந்து தொழிலாளி—முதலாளி உறவில் ஒரு பெரும் முறிவை ஏற்படுத்தி விட்டன. தங்களின் சட்டபூர்வமான உரிமைகளை ஜெனரல் மானேஜர் வழங்க மறுத்ததினுல் ஆத்திரமடைந்த எல்லாத் தொழிலாளர்களும் அவர் வேலையிலிருந்து விலகவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். வேறு வழியின்றிக் கம்பெனியை விட்டு வெளியேறிய அவர் திரும்பி வருவதற்குப் பொலிஸ் கூட உதவ முடியாமல் போய்விட்டது. இதற்கிடையில் ஜெனரல் மானேஜருக்கு எதிராக ஒன்றுபோல் ஐக்கியப்பட்டிருந்த தொழிலாளர்கள், லிகிதர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்ப வல்லுனர்கள் எல்லோரும் சேர்ந்து கம்பெனியின் நிர்வாகத்தை நடத்தினர். டைரக்டர் சபைத் தலைவரோ அல்லது டைரக்டர்களோ பொறுப்பேற்க வருவதாயில்லை; தொழிலாளர் உழைத்த சம்பளத்தைக் கொடுப்பதற்குப் பொறுப்பேற்போரும் இல்லை. ஆனால், தொழிலாளர்கள் தொடர்ந்து நடத்தி முதலாளிமார் இன்றி எப்படி நடத்த முடியும் என்று அவர்களுக்கு நடைமுறையில் பாடம் படிப்பிக்க முடிவு செய்திருந்தனர்.

## இறுதி வெற்றி கிடைத்தது

ஆனால், டைரக்டர்கள் பொலிஸின் உதவியுடன், முதல் போயா நாளன்று அங்கிருந்த சில தொழிலாளிகளை வெளியேற்றியதன் மூலம் தொழிற்சாலையைக் கதவடைப்புச் செய்வதில் வெற்றி கண்டனர். அதன் பின்பு சுமார் ஒரு மாத காலம் மூடப்பட்டிருந்த தொழிற்சாலை கடைசியில் தொழிற் திணைக்களத்தின் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின்பு திறக்கப்பட்டது. ஆனால், திரும்பி வந்த ஜெனரல் மானேஜர் குறுகிய காலமே நிலைத்திருந்தார். இப்பொழுது ஒரு புதிய ஜெனரல் மானேஜர் புதிய நிர்வாகத்தின் தலைமையில் பொறுப்பேற்றுள்ளார். தொழிலாளரின் வீரமிக்க போராட்டமும், துர்நிர்வாகத்தை அவர்கள் அம்பலப்படுத்தியதும் விரும்பிய முடிவைக் கொணர்ந்ததோடு இறுதி வெற்றியையும் அவர்களுக்குத் தேடிக் கொடுத்தது என்பதில் சந்தேகமில்லை. ஜெனரல் மானேஜரை வெளியேற்றுவதற்கு காரணஸ்தர்கள் என்ற குற்றச்சாட்டில், கம்பெனி திரும்பத் திறக்கப்பட்டபோது, அரைச் சம்பளத்துடன் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட சிலர், பொலிஸ் வழக்கேதும் அவர்களுக்கெதிராகத் தொடராத காரணத்தினால் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள். வேலை மறுக்கப்பட்ட காலத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய சம்பளத் தொகை சம்பந்தமாகவே இப்பொழுது பேச்சு வார்த்தை நடத்தப்பட உள்ளது.

## சம்பள நிர்ணய சபைகளில்

சம்பளநிர்ணய சபைத் துறை சம்பந்தமான சாதனைகளிலும் இ.தொ.ச.ச. பெருமையடைகிறது. நெசவுத் தொழிலுக்கு புதிதாக நிறுவப்பட்டுள்ள சம்பள நிர்ணயசபையில் கிடைத்தவெற்றி எமது வெற்றிகளில் மிகப் பெரியதாகும். இந்தச் சம்பள நிர்ணய சபையில் எமது பிரதிநிதிகள் தமது தீர்மானங்களை வெற்றிகரமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து போராடியதனுல் இப்பொழுது இதிலுள்ள தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளம், எஞ்சினியரிங் தொழில் சம்பள நிர்ணய சபையின் முடிவுகளுக்குக் நெருங்கி வந்துள்ளது. பயிற்சியற்ற தொழிலாளியின் குறைந்த பட்ச சம்பளம் ரூபா 5/80 ஆகவும்; அரைப் பயிற்சி பெற்ற தொழிலாளியின் சம்பளம் ரூபா 6/30 ஆகவும்; பயிற்சி பெற்ற தொழிலாளியின் சம்பளம் ரூபா 6/90 ஆகவும் ஆக்கப்பட்டிருக்கின்றது. நாணய மதிப்பிறக்க அலவன்ஸ் இந்த சம்பளத்திற்கு மேல் கொடுக்கப்படவேண்டும் என்பதோடு,ஆண் பெண் என்ற பாகுபாடின்றி சம்பளத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நூற்பாளர்கள், பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் என்று தரம்பிரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்க ஓர் விஷயமாகும். மந்திரியின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு முன் இத் தீர்மானங்கள் சம்பள நிர்ணய சபையின் இன்னெரு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றது.

அச்சுத் தொழிலேச் சேர்ந்த சம்பள நிர்ணய சபை தன்னுள் அடங்கும் தொழிலாளர்களேத் திரும்பவும் தரம்பிரித்துள்ளது. இந்தச் சபை பெரும்பான்மையான தொழிலாளர்களின் தரத்தை உயர்த்தி அதன் மூலம் சுயமாகவே அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தியுள்ளது. 1966ம் ஆண்டு இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடன் அரசாங்க வீதத்தில் அச்சுத் தொழிலாளர்களுக்கு விசேஷ அலவன்ஸ் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை இது குழப்பியுள்ளதோடு, அவ் ஒப்பந்தத்தை வழக்கில் இல்லாமலும் ஆக்கியுள்ளது. இப்பொழுது, உயர்ந்த வருடாந்த சம்பள உயர்வையும் கொடுக்கக்கூடிய ஒரு புதிய ஒப்பந்தத்திற்காக நாம் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறேம்.

சம்பள நிர்ணய சபைகளின் கீழுள்ள பலவித தொழிலாளர்களுக்கும், மற்றும் எஞ்சினியரிங் தொழில், தேயிலே ஏற்றுமதித் தொழில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச சம்பளத்தில் நாளொன்றுக்கு ரூபா 1/35 சம்பள உயர்வு கொடுப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் எமது பிரதிநிதிகள் வெற்றிபெற்றுள்ளார்கள். ரப்பர் ஏற்றுமதித் தொழில் சம்பள நிர்ணய சபையும் இதே தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதோடு அதன் அடுத்த கூட்டத்தில் இதை உறுதிப்படுத்தியுள்ளது. இதேபோன்ற இன்னெரு தீர்மானம் செங்கல், ஓடு உற்பத்தித் தொழில் சம்பள நிர்ணய சபையிலும் எமது பிரதிநிதிகளால் கொண்டுவரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ஜினியரிங் தொழில் சம்பள நிர்ணய சபை புதிய முடிவு 1970 செப்டம்பர் 1ம் திகதி நடைமுறைக்கு வந்தது. அதேவேளையில் தேயிலை ஏற்றுமதித் தொழில் முடிவு 1970 நவம்பர் 1ம் தேதி நடைமுறைக்கு வந்தது. இந்தத் தீர்மானங்கள் அரசாங்க வர்த்தமானி (கசெட்)யில் வெளியிடப்பட்ட பின்பு, இ.தொ.ச.ச. இப்பொழுது தொழிலாளர்களின் தரங்களுக்கு இடையே நடைமுறையில் இருந்து வரும் வித்தியாசம் பாதுகாக்கப்படுவதோடு தொடர்ந்து இருக்கவும் வேண்டும் என்ற கோரிக்கையுடன் முதலாளிமார் சம்மேளனத்தை அணுகியுள்ளது. குறைந்த பட்ச நாள் சம்பளம் ரூபா. 1/35 ஆல் உயர்த்தப்படும் பொழுது, வருடா வருடம் சம்பள உயர்வு பெறும் உயர்ந்த சம்பளம் பெறுபவர்களின் சம்பளமும் இதேபோல் ரூபா. 1/35 ஆல் உயர்த்தப்படவேண்டும் என்பதை இது குறிக்கிறது. வேறு வார்த்தையில் கூறுவதானால், முதலாளிமார் சம்மேளனம் புதிய வருடாந்த சம்பள உயர்வுடன் ஓர் புதிய சம்பளத் திட்டத்தை சம்பள நிர்ணய சபை நிர்ணயித்த புதிய குறைந்தபட்ச சம்பள அடிப்படையில் ஏற்படுத்தவேண்டுமெனவும், ஏற்படுத்தப்படவிருக்கும் இந்த புதிய சம்பளத் திட்டம் தொழிலாளர்களுக்கிடையே தற்பொழுது இருந்துவரும் தரவித்தியாசங்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் இ. தொ. ச. ச. கோரியுள்ளது, இது விஷயமாக எம்மால் இன்னும் எந்தவித உடன்படிக்கைக்கும் வரமுடியவில்லை.

## முன்பு நடந்தவை

இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கும் முக்கூட்டுத் தொழிற் சங்கங்களுக்கும் இடையே புதிய கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமாக நடைபெறுவதாகக் கூறப்பட்ட பேச்சுவார்த்தை கடந்த ஒரு வருட காலமாக ஏற்படுத்திய குழப்ப நிலையே இதற்குக் காரணமாகும். இதில் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் விளக்கமாகக் கூறுவதற்கு சிறிது பின்னோக்கிச் செல்வது அவசியமாகிறது. 1967ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற தனியார்துறை வேலை நிறுத்தத்தை முக்கூட்டுத் தொழிற் சங்கங்கள் காட்டிக் கொடுத்த பின்பு, நாளொன்றுக்கு எட்டுச் சதம் சம்பளம் உயர்வு அளிக்கும்படியான தீர்ப்பை கைத்தொழில் கோர்ட் வழங்கியதும், அதன் பின்பு 1968ல் இ. தொ.ச.ச. நடத்திய 18வது மகாநாட்டின் முடிவின் அடிப்படையில் சமீபகால சகல நிகழ்ச்சிகளையும் கணிப்பில் எடுத்து, எமது இ. தொ. ச. ச. கோரிக்கைகளை திருத்தி உருவாக்கத் தீர்மானித்ததையும் தோழர்கள் ஞாபகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறோம். 5-8-1969ல் நடந்த விசேஷ மகாநாட்டில் கீழ்க் காணப்படும் அடிப்படையில் இ.தொ.ச.ச. ஒரு புதிய சம்பளத் திட்டத்தைக் கோரியது.

(1) எஞ்சினியரிங் தொழிலைச் சேர்ந்த பயிற்சிபெற்ற தொழிலாளியின் ஆரம்ப சம்பளம் நாளொன்றிற்கு ரூபா 9/60க்குக் குறைந்ததாக இருக்கக் கூடாது.

(2) தேயிலை ரப்பர் ஏற்றுமதி தொழிலைச் சேர்ந்த இரண்டாம் தர (கிரேட்) முடைய பயிற்சியற்ற தொழிலாளியின் நாளாந்த சம்பளம் ரூபா 6/50க்கு குறைவாக இருக்கக்கூடாது; அதே போன்ற வேலையைச் செய்யும் பெண் தொழிலாளியின் சம்பளம் ஆண்-பெண் என்ற பாகுபாடின்றி ஒரே அளவினதாக இருக்கவேண்டும்.

மற்றைய சகல தொழில்களிலும் இதேபோன்ற மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் எனக் கோரினோம். ஒரே முதலாளியின் கீழ் வேலைபார்க்கும் எல்லா தொழிலாளிகட்கும், லீவு வசதி போன்ற விஷயத்தில் லிகிதர் மற்றும் அது சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்ற சகல விதிமுறைகளும் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தோம்.

## எமது கோரிக்கை

அதைத் தொடர்ந்து அன்றைய கைத்தொழில் மந்திரியின் பயிற்சியற்ற தொழிலாளியின் சம்பளம் ரூபா 190/- ஆக இருக்க வேண்டும் என்ற கூற்றிலும், 1968 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் நடைபெற்ற அரசாங்க ஊழியரின் வேலை நிறுத்தம் காரணமாக அரசாங்கத்தினல் அதன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வையும், வாழ்க்கைச் செலவு மேலும் உயர்ந்ததையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் குறைந்த பட்ச மாதச் சம்பளம் ரூபா 225/- ஆக இருக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கத் தீர்மனித்தது.

இ.தொ.ச.ச. பிரதிநிதிகளால் சம்பள நிர்ணயசபைகளில் பிரேரிக்கப்பட்ட தீர்மானங்கள் மூலமாகப் பெறப்பட்ட சம்பள உயர்வு காரணமாக, 5-8-69ல் நடந்த விசேஷ மகாநாட்டுக் கோரிக்கைக்கு வெகு அருகாமையில் பயிற்சியற்ற தொழிலாளர்களின் சம்பளம் கொண்டுவரப்பட்டது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அன்று எமது கோரிக்கை ஒரு நாளைய சம்பளம் ரூபா 6/50 ஆக இருக்கவேண்டும் என்பதே. இன்று கைத்தொழில் கோர்ட்டினுல் வழங்கப்பட்ட 8 சதம் உயர்வை கணக்கில் எடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமல் சம்பள உயர்வை ரூபா 6/25 க்குக் கொண்டு வருவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். இதையும் சேர்த்தால் இதன் தொகை ரூபா 6/33 ஆகும்—அதாவது எமது கோரிக்கையான ரூபா 6/50க்கு அருகாமைக்கு வந்துவிட்டது.

ஆனால், பயிற்சிபெற்ற தொழிலாளியின் சம்பளம் சம்பந்தமாக நாம் எமது இலக்குக்கு அருகாமையில் வரமுடியவில்லை; நாம் ரூபா. 9.60 கோரிக்கையை முன்வைத்தபோதும் சம்பள நிர்ணய சபையின் மூலமாக ரூபா 7.43 மட்டுமே எங்களால் பெற முடிந்தது.

## கவனிக்கப்பட வேண்டிய விஷயம்

இதற்கிடையில், முக்கூட்டு தொழிற் சங்கங்களும் கடந்த 1969 ஒக்டோபரிலிருந்து முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒரு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்காகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றன. முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட பயிற்சியற்ற தொழிலாளியின் குறைந்தபட்ச தொகை ரூபா. 165/- ஆகும். இது தற்போதைய ஒரு நாளைய குறைந்தபட்ச சம்பளமான ரூபா 6.33ஐ 26 ஆல் பெருக்கி வரும் தொகையிலும் பார்க்க அதிகம் வித்தியாசமானதல்ல. இந்தப் பெருக்கல் தொகை ரூபா 164.58 ஆகும். ஆனால், கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்தபின் தொழில் அமைச்சரின் செல்வாக்கை உபயோகித்து முக்கூட்டுத் தொழிற் சங்கங்கள் இன்னுமொரு ரூபா. 15/- ஐ அதிகமாகப் பெற்று முன்பிருந்ததிலும் பார்க்க இன்னுமொருபடி அதிகமாக, அதாவது பயிற்சியற்ற தொழிலாளியின் மாதச் சம்பளத்தை ரூபா. 180/-ஆக ஆக்கின.

ஒருமாதத்திற்கு முன்பாக, முதலாளிமார் சம்மேளனம் எம்முடனும் இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட விரும்பி இதன் ஒரு நகல் பிரதியை எமக்கு அனுப்பிவைத்தபோதிலும், இன்று இந்த மகாநாடு நடைபெறும் இந்த நேரம் வரை முக்கூட்டு தொழிற் சங்கங்களினால் இந்த ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்திடப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும்

என்றாவது ஒருநாள் இந்தக் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால், சம்பள நிர்ணய சபை இயந்திரத்தினூடாக இ.தொ.ச.ச. தொழிலாளர்களுக்கென எந்தவித நிபந்தனைகளுமின்றி வென்றெடுத்த தொகையிலும் பார்க்க, முக்கூட்டுத் தொழிற் சங்கத்தினர், தமக்கு பின்னால் அரசாங்க சக்தியுடனும் அவர்களின் துணையோடும் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலமும் வென்றெடுத்த தொகை எம்மிலும் பார்க்க வெறுமனே ரூபா. 15/- மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஒப்பந்தத்தின் நகலை ஆராயும் பொழுது, காணும் அம்சம், ஒரு பயிற்சியற்ற தொழிலாளி மிகவும் குறைந்த தனது சம்பள நிலையிலிருந்து ரூபா. 50/-ஐ உயர்வாக மாத மாதம் பெறப் போகின்றான் என்ற போதிலும், அதிக காலம் சேவை செய்த தொழிலாளிகள் ரூபா.15/- ஐ மட்டுமே உயர்வாகப் பெறவிருக்கிறார்கள் என்ற நிலை இவர்களின் இந்த வெற்றியை அர்த்தமற்றதாக்கி விடுகிறது. வேறுவார்த்தையில் கூறுவதாக இருந்தால் இ.தொ.ச.ச. முன்வைத்த கோரிக்கைபோல், தற்போது நடைமுறையிலிருக்கும் சம்பள வித்தியாசம் தொடர்ந்தும் இருக்கமாட்டாது என்பதேயாகும். தற்போது நடைமுறையில் இருக்கும் சம்பம்பள வித்தியாசம் பழைய தொழிலாளர்களின் சேவைக்கால நலன்களுக்கு எதிராக மாற்றப்பட இருக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

## அர்த்தமற்றது

ஒரு வாரம் 28 மணித்தியாலம் வேலை செய்யாத தொழிலாளர்களுக்கு அவர்களின் சம்பளத்திலிருந்து அந்த வார போயா தின சம்பளம் பிடித்துக்கொள்ளப்படுவதை இந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கின்றது என்ற உண்மை இந்த ஒப்பந்தத்தை மேலும் அர்த்தமற்றதாக்கி விடுகின்றது. முன்பே அங்கீகரிக்கப்பட்ட விடுதலை தினங்கள் வேலைசெய்யப்பட்ட நாட்களாக இதன் கணிப்பீடு காரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எப்பொழுதும் மாதாந்த சம்பளமே வழங்கப்படும் லிகிதர் வேலை செய்யும் ஊழியர்கள் சம்பந்தமாக இது போன்ற எந்தவித நிபந்தனையும் முதலாளிமார் விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை சினிமா ஸ்டுடியோ ஊழியர் சங்கத்திற்கும் (இ. தொ. ச. ச.) சினிமா முதலாளிமார்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தங்களிலும் இது போன்ற எந்த நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களும் மாதாந்த சம்பளம் பெறுபவர்களே.

நகல் உடன்படிக்கையின்படி, இந்த உடன்படிக்கையில் அடங்கிய, இதனால் கட்டுப்படுத்தப்பட்ட மூன்று தொழிற் சங்க சம்மேளனங்களும் அதன் இணைந்த தொழிற் சங்கங்களும் அதன் அங்கத்தவர்களும், தனியாகவும் கூட்டாகவும் முதலாளிமார் சம்மேளனத்திற்கோ அல்லது அதன் எந்தவொரு அங்கத்தவருக்கு எதிராகவோ, ஏதாவது தொழிற் தகராறு சம்பந்தமாக, **அந்தத் தொழிற் தகராறு இந்த ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்டதோ இல்லையோ,** ஒரு குறைந்த பட்ச காலமாகிய மூன்று வருடத்திற்கு, வேலை நிறுத்தத்திலோ, அல்லது வேறு எந்தவித தொழிற் சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையிலோ ஈடுபடமாட்டார்கள் என்ற நிபந்தனையை ஏற்றுக்கொண்டு முதலாளிமார் சம்மேளனத்துடன் கைச்சாத்திட விருக்கும் கூட்டு ஒப்பந்தம் அவர்கள் செய்யும் மிகவும் பாரதூர மான துரோகமாகும்.

## இதுவரை நடக்காத துரோகம்

இதுபோன்ற, தொழிலாளர் நலன்களுக்கு எதிரான உணர்ச்சி யற்ற படுதுரோகத்தை நாம் இதுவரை பார்த்ததேயில்லை. தொழி லாளர்கள் கையும் காலும் கட்டப்பட்டு முதலாளிமார் தயவுக் காக அவர்கள் முன்னால் தூக்கிவீசப்பட்டது இதுவரை என் றுமே கொஞ்சமாகவோ அதிகமாகவோ நடந்ததில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நகல் ஒப்பந்தத்திலுள்ள மற் றைய குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். முத லாவதாக, மாதச் சம்பளம் என்ற முகமூடியின் கீழ், ஓவர் டைம் கணக்கிடுவதற்கான மணித்தியால விகிதத்தை நிர்ணயிப்பதற் காக, மாதச் சம்பளம் 200க்குப் பதிலாக 240 ஆல் பிரிக்கப்பட இருக்கிறது. இது இயற்கையாக ஓவர் டைம் சம்பாதிப்பைக் குறைக்கவே செய்யும். இரண்டாவதாக, ஊழியர் பிராவிடன்ட் நிதியில் அடங்காத சேவைக் காலத்திற்கு, வருடத்திற்கு அரை மாத முழுச் சம்பளம் வீதம் அதற்குரிய சேவைக்காலத்திற்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்றும், இந்த நஷ்டஈட்டுக் கணிப்பீடு 1959ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதிய சம்பளத்தின் அடிப்படையிலேயே கணிப்பிடப்படும் என்றும் நகல் உடன்படிக்கை கூறுகிறது. ஒரு வருடத்திற்கு முன்பு சினிமாக் கம்பெனிகளுடன் நாம் கைச்சாத் திட்ட கூட்டு ஒப்பந்தத்திற்கு இது முழு மாறானது ஆகும். எமது அந்த ஒப்பந்தத்தின்படி ஊழியர் பிராவிடன்ட் நிதி ஆரம்பிக்கப் பட்டதற்கு முந்திய கால சேவைக்கு நஷ்டஈடு, ஒரு வருட சேவைக்கு ஒரு மாத முழுச் சம்பளம் என்ற அடிப்படையில் கணிக் கப்படுவதோடு இந்த கணிப்பீட்டுத் தொகை தொழிலாளி ஓய்வு பெறும் காலத்தின் மாதச் சம்பளம் எவ்வளவோ அதன் அடிப் படையிலேயே கணிக்கப்படும்.

மூன்றுவதாக, தொழிலாளர்கள் 55 வயதில் ஓய்வுபெற வேண்டும் என்று இந்த நகல் உடன்படிக்கை கூறுகிறது. இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துடன் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப் பந்தத்தின்படி இந்த முதலாளிமார் சம்மேளனம், லிகிதர்கள் மற் றும் இணையான ஊழியர்களின் ஓய்வு பெறும் உரிமையை 60 வய தில் வைத்து அங்கீகாரம் வழங்கி உள்ளது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். 55 வயதில் ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்குத் தொழிலாளிகள் நிர்ப்பந்திக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையை அங்கீகரிக்க இ.தொ.ச.ச. மறுத்துள்ளது. அதனால்தான், சினிமா முதலாளிகளுடன் எமது அங்கத்துவ தொழிற் சங்கம் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தில் இதே விஷயம் அடக்கப்படவில்லை. முக்கூட்டுத் தொழிற் சங்கங்களின் காட்டிக் கொடுப்பில் இதுவும் ஓர் பாரதூரமானதொன்றாகும்.

## வேடிக்கையான விஷயம்

மிகவும் அதிருப்தியான ஒப்பந்தத்தில் மிகவும் வெளிப்படையான குறைபாடுகள் இவை. தொழிற் சங்க இயக்கத்தில் ஐக்கியமின்மையும், பேச்சுவார்த்தை நடத்தும் போது தகுதியும் திறமையும் வாய்ந்த தலைவர்கள் இல்லாமையும், பொருளாதாரக் கோரிக்கைகளைப் பெறுவதில் கூட புரட்சிகர வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பதுமே இதன் விளைவாகக் கிடைத்த முடிவுகள். இவற்றில் மிகவும் வேடிக்கையான விஷயம், முக்கூட்டுத் தொழிற் சங்கத் தலைமைப்பீடங்கள், தாமே பேச்சு வார்த்தை நடத்தி உடன்படிக்கைக்கு ஒற்றுமையையும் தெரிவித்த அதே கூட்டு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு தயங்குவதேயாகும். இந்த நகல் ஒப்பந்தத்தைநாம் காரசாரமாக விமர்சித்து அம்பலப்படுத்தியதினால் கலக்கம் அடைந்த அவர்கள், தமது அங்கத்தவர்கள் முன்னும் முழுத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னும் மேலும் அம்பலப் படுத்தப்பட்டு விடுவார்கள் என்றும் இப்பொழுது பயப்படுகிறார்கள் போல் தெரிகிறது.

என்றாவது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமானால், இந்த முக்கூட்டு தொழிற் சங்க தலைமையினரின் வர்க்க ஒத்துழைப்பு, துரோகக் கொள்கைகளை அம்பலப்படுத்துவதற்கு எமது அங்கத்தவர்கள் தொடர்ச்சியான இயக்கம் நடத்தி அந்த இயக்கத்தின் மூலம், கூட்டாட்சியினரின் சீர்த்திருத்தவாத, திரிபுவாத தொழிற் சங்க தலைமைக்கெதிராக அதன் அங்கத்தவர்களை கிளர்ந்து எழும்படி அறைகூவல் விடுத்து, பிரகாசம் மிகுந்த மாசேதுங் சிந்தனையினால் வழிகாட்டப்படும் இ.தொ.ச.ச. வின் புரட்சிகரப் பாதையின் கீழ் தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதற்கு அணிதிரட்ட வேண்டும். இதைத் தவிர வேறுவழி எதுவுமே கிடையாது.

## அறிவுறுத்தும் அறிகுறிகள்

எதிர்காலத்தில் மேலும் அதிகமான போராட்டங்கள் நடைபெற இருப்பதால் அந்தப்போராட்டங்களையெல்லாம் முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். எதிர்காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்கள் பழைய அமைப்புகளுக்கும், முறைகளுக்கும் ஏற்ப அமைய மாட்டா என்பதற்கு இப்பொழுதே அறிகுறிகள் தென்படுகின்றன. இது சம்பந்தமாக, இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின் நடைபெற்ற அக்மி அலுமினியம் கம்பெனி லிமிட்டெட்டின் வேலை நிறுத்தத்தை நாம் குறிப்பிட்டேயாக வேண்டும். தேயிலை பெட்டிகளில் தேயிலை அடைப்பதற்காக அலுமினிய மென் தகடுகளை உற்பத்தி செய்யும் கம்பெனி இலங்கையில் இது ஒன்றே. இரண்டு மாதத்திற்குள்ளாக, தேயிலை அடைப்பதற்கு அலுமினிய மென் தகடுகள் எதுவும் இல்லாததால் தேயிலைத் தொழில் முழுவதுமே பயமுறுத்தப்பட்டது. மக்கள் அரசாங்கம் என்று சொல்லப்படும் இந்த அரசாங்கத்தின் தொழில் மந்திரியைத் தூண்டி, தகராறைக் கட்டாய மத்தியஸ்திற்கு விடுவதற்காக, பெரும் தனி நலன்கள் திரை மறைவிலிருந்து அச்சுறுத்தல் நடத்தின. இந்த நடவடிக்கை முதலாளிக்கு உதவுவதற்காக செய்யப்பட்ட செயலாகும், ஏனெனில், இது வேலை நிறுத்தத்தைச் சட்ட விரோதமாக்கியதோடு இறுதியில் புதிய தொழிலாளிகளை வேலைக்கு எடுப்பதில் முதலாளிக்கு உதவியுமிருக்கும். பாராளுமன்றத்தில் தொழில் மந்திரி பெருமளவு விஷயங்களை ஏற்றுக் கொண்டதோடு நில்லாமல், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர், அரசாங்கத்தின் மீது அரசியல் பழி வாங்கலை நடத்தினுர் என்று குற்றம் சாட்டி அவர்மேல் தனிப்பட்ட அவதூறுகள் பலவற்றையும் குவித்தார்.

அந்நிய தேச முதலாளிகளும் அவர்களின் உதவிக்கு ஓடோடி வந்த தொழில் மந்திரியும் தொழிலாளர்களின் வீரத்தையும் உறுதியையும் போராடும் ஆர்வத்தையும் குறைத்தே கணித்தனர். இ.தொ.ச.ச.வின் துடிப்பான தலைமையின் கீழ், வேலை நிறுத்தம் சட்ட விரோதமாக்கப்பட்ட போதிலும் தொழிலாளர்கள் ஐக்கியமாக நின்று வேலைக்குத் திரும்ப மறுத்தனர். இந்தத் துணிவான போராடும் நிலை பலனளிக்காமல் போகவில்லை. ஒரு சில நாட்களுக்குள்ளாக முதலாளிமார்களுக்கும் சட்ட விரோத வேலை நிறுத்தத்தின் தலைவர்களுக்குமிடையில் தொழிற் திணைக்களம் மகாநாடு கூட்டவேண்டி ஏற்பட்டது. பெரும்பாலான விஷயங்கள் அங்கு தீர்க்கப்பட்டு இரண்டு விஷயங்கள் மட்டும் மேலும் பேச்சுவார்த்தைகளுக்கென விடப்பட்டன. இப்பொழுது இந்த இரண்டு விஷயங்களும் தீர்க்கப்பட்டு விட்டன.

## நினைவில்கொள்ள வேண்டியவை

வேலை நிறுத்தத்தை முழு வெற்றிக்குக் கொண்டு வந்து தமது போராடும் ஆர்வத்தை வெளிக்காட்டி முதலாளியினதும் தொழில் மந்திரியினதும் பிதற்றலை அம்பலப்படுத்திய அக்மி அலுமினியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பெனி தொழிலாளர்களை நாம் பாராட்டுகிறோம். அவர்களின் இந்த நடவடிக்கையை நாம் எமது எல்லா அங்கத்தவர்களுக்கும் சிபார்சு செய்வதோடு, இந்தப் புரட்சிகரப் பாரம்பரியத்தைப் பின்தொடர்ந்து செல்வதற்குத் தங்களை தயார் செய்யும்படி அறை கூவல் விடுக்கின்றோம். பழைய அமைப்பு, பழைய முறைப் போராட்டங்களை உடைத்தெறிந்து வெளிவருவதற்கு, சட்டம், அரசியல் அமைப்புச் சட்டம் என்பனவற்றை முறித்தெறிந்து பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட பாதையில் செல்ல பய மற்ற தலைமை கொடுப்பதற்கு, இன்னும் தேவையானால் தொழி லாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வைக் கிளறி அவர்களின் வர்க்கப் போராட்டத்திற்கு முழு வடிவம் கொடுக்கும் சட்ட விரோத போராட்டங்களுக்கு தலைமை கொடுப்பதற்கு, புரட்சிகர தலைமை யின் கீழ் எப்பொழுது தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்த முடி யுமோ அப்பொழுதெல்லாம் அவர்களுக்குப் புரட்சிகரத் தலைமை கொடுப்பது எமது கடமையாகும் என்பதை ஞாபகத்தில் வைத் துக்கொள்ள வேண்டும்.

ஆனால், இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு கவனமாய் திட்ட மிட்டு தயாரிப்பு செய்வதும், பொறுமையான கிளர்ச்சியும், ஸ்தாபன அமைப்பும் தொழிலாளர்களிடையே முன்னோடியாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். வெறும் புரட்சிகர பேச்சுக்களால் எத்தகைய பயனும் இல்லை. தொழிலா ளர்களின் பரந்த பகுதியினரை எப்படி ஐக்கியப்படுத்துவது, தொழிலாளி வர்க்கத்தின் நேசசக்திகளை எப்படி வென்றெடுப் பது, விசேஷமாக அண்மைப் பிரதேசங்களிலுள்ள நெருங்கிய நேச சக்திகளை எப்படி வென்றெடுப்பது, பொலிஸ் அடக்குமுறையை எப்படி எதிர்நோக்கி முறி யடிப்பது, நீண்டபோராட்டத்தைத் தாக்குப்பிடித்துஎப்படி முன் னெடுத்துச் செல்வது – இதுபோன்ற பலதரப்பட்ட இயக்க சம் பந்தமான விஷயங்களை கவனமாகப் படித்து செயல்படுத்துவ தற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதன் அர்த்தம், இயற்கையாகவே எழும் போராட்டங்கள் அல்லது வேலை நிறுத் தங்கள் இல்லை என்பது அல்ல. ஆனால், எந்நேரமும் நாம் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கும்போது எதிரியின் எதிர்த் தாக்கு தலை முறியடிக்கும் வழிவகைகளைக் கையாளவேண்டும்.

## செங்கொடிச் சங்கத்தின் வளர்ச்சி

இதுபோன்ற விவரங்கள் எமது இலங்கை தோட்டத் தொழி லாளர் செங்கொடி சங்கம் சமீபகாலத்தில் தோட்டப் பகுதிகளில் நடத்திய பெரும் வேலைநிறுத்தப் போராட்டங்களிலிருந்து படித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்கள் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன. விசேஷமாக மேபீல்ட், மடக்கும்பர, கினகலே தோட்டங்களில் நடைபெற்ற சரித்திரப் பிரசித்திபெற்ற வேலைநிறுத்தங்களேயே நாம் குறிப்பிடுகின்றோம்.

இக் கட்டத்தில், இ. தொ. ச. ச. வின் கடந்த மாநாடு, நடைபெற்றபின், தோட்டத் தொழிலாளர்களிடையே பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது என்று கூறுவது மிகப் பொருத்தமானதாகும். அதன் விளைவாக எண்ணிக்கையில் இ.தொ.கா. வுக்கு அடுத்ததாக எமது செங்கொடி சங்கம் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததும், மிகப் பலம் வாய்ந்ததுமாக இலங்கை தோட்டத் தொழிலாளர்களிடையே வளர்ச்சி அடைந்துள்ளது. எம்முடன் இணைக்கப்பட்டுள்ள மற்றும் சங்கங்களுக்கு செங்கொடி சங்கத்தின் கடந்தகால நடவடிக்கைகளிலிருந்து பெற்ற அனுபவத்தை கடைப்பிடிக்கும்படி நாம் சிபார்சு செய்கிறோம். நிச்சயமாக, இச் சங்கம்தான் எம்முடன் இணைந்துள்ள சங்கங்களில் பரந்த அளவு அரசியல்மயப்படுத்தப்பட்டதும், மார்க்சிஸம் - லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையை வெளிப்படையாகப் பரப்புவதுமாகும். இந்த அபிவிருத்திக்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. கடுமையாகச் சுரண்டப்படும் பாட்டாளி வர்க்கத்தில், தோட்டத் தொழிலாளர்கள் விசேஷமாக இந்திய வம்சாவழியினர்களே மிகவும் கடுமையாகச் சுரண்டப்படுபவர்கள். அவர்களில் பெரும்பாலோர் பிரஜாவுரிமையும், வாக்குரிமையும் இல்லாதிருக்கின்றனர். ஆகவேதான், எமது புரட்சிகர அறைகூவல் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் உடனடி எதிரொலியை அவர்களின் இதயங்களில் கிளப்புவது ஆச்சரியத்திற்குரியதல்ல. 1963, டிசம்பரில் நடைபெற்ற எமது 16வது மாநாட்டிற்குப் பின்னர், எம்மை அழுத்திய நவீன திரிபுவாதம் என்ற பாரங்கல்லை அகற்றியதிலிருந்து வகுப்புவாத, பிற்போக்குவாதத் தலைவர்களான தொண்டமான், அசீஸ் ஆகியோரிடமிருந்தும், சீர்திருத்தவாத, திரிபுவாதத் தலைவர்களான லங்கா சமசமாஜக் கட்சி, கெனமன் கும்பலிடமிருந்தும் தொழிலாளர்களை எமது பக்கம் வென்றெடுப்பதற்கு முடிந்திருக்கிறது.

நாம் கடப்பதற்கு இன்னும் ஒரு நீண்ட பாதை இருப்பதுடன், திருத்துவதற்கு இன்னும் பல குறைபாடுகளும் உள்ளன. மாசேதுங் சிந்தனையினால் வழிகாட்டப்படும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நாம் சரியான பாதையில் செல்கிறோம் என்று நம்புவதுடன் பல வெற்றிகளையும் பெற்றிருக்கிறோம். நாம் படித்த பாடங்களை யோசித்துப் பார்த்து எமது பிழைகளைத் திருத்தி இன்னும் வேகமாக முன்னேக்கி வீரநடை போடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவனிக்க வேண்டிய மற்ருெரு முக்கிய பாடம்

இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள் எவ்வளவுதான் புரட்சிகர சிந்தனையுள்ளவர்களாயிருந்தபோதிலும் அவர்கள் தன்னந்தனியாக சமுதாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்பது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய பாடமாகும். எனவே, இந்த இலக்கை அடைவதற்கு இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களுடன் சிங்கள தொழிலாளர்களையும், விவசாயிகளையும் ஐக்கியப் படுத்தவேண்டும். சிங்கள தொழிலாளர்களை ஸ்தாபனரீதியாக வளர்த்தெடுத்து சிங்கள விவசாயிகளுடன் ஐக்கியத்தைத் தோற்றுவிக்க வேண்டிய முயற்சிகளை இரட்டிப்பாக்கும் பொறுப்பு பெரும்பான்மையான சிங்கள தொழிலாளர்கள் வசிக்கும் பிரதேசங்களிலும், தோட்டப் பகுதிகளிலும் வாழும் தோழர்களையே சார்ந்தது. இந்த விதமாகத்தான் சிங்கள தொழிலாளர்கள்—விவசாயிகளின் ஐக்கியத்திற்கும், இறுதியாக தோட்டத் தொழிலாளர்களுடனுன அவர்களின் ஐக்கியத்திற்கும் தோழர்கள் உதவி செய்ய முடியும். ஒருமுறை இந்த ஐக்கியம் உருவாக்கப்பட்டால், பிற்போக்குவாதிகளுக்கு விழும் மரண அடியாக அது அமையும். இந்த ஐக்கியத்தைக் குலைப்பதற்காகத்தான் இவர்களிடையே பல சீர்குலைவு சக்திகள் இயங்குகின்றன. எப்பொழுதும் தோட்ட முதலாளிகளின் தூண்டுதலினுல் நடைபெறும் பொலிஸின் அடக்கு முறைக்கு எதிராக வெறும் வேலைநிறுத்தப் போராட்டம் பரிகாரமாக அமையாது என்பது கற்க வேண்டிய மற்ருெரு பாடமாகும். செங்கொடி சங்கம் அளிக்கும் புரட்சிகர தலைமையினுல்தான் பொலிஸ் அடக்கு முறைக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் சக்திவாய்ந்த எதிர்ப்பு இயக்கங்களை சமீப காலங்களில் நடத்த முடிந்தது. பித்தளை பொத்தான்களையும் காக்கிச் சட்டைகளையும் கண்டவுடனேயே குதிகால் இடுப்பில்பட ஓட்டமெடுத்த ராமசாமிகளும், மீனுட்சிகளும் ஒருகாலத்தில் இருந்தனர். இன்று, மாசேதுங் சிந்தனையின் புரட்சிகர அறைகூவலினுல் வீரமூட்டப்பட்ட அவர்களிடையே பெரும் இறுக்கமான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. அவர்கள் இன்று பொலிஸைக் கண்டு ஓடுவதில்லை; எதிர்த்துப் போராடுகிருர்கள். இதில் பெண் தொழிலாளர்களும் அடங்குவர். பொலிஸை அவர்கள் திருப்பித் தாக்கியதோடு மட்டுமின்றி துப்பாக்கிகளையும் பறித்தெடுத்தார்கள். அதிக எண்ணிக்கையினராக இல்லாவிட்டால், இன்று தோட்டங்களில் நுழையப்பயப்படுபவர்கள் பொலிஸே—மக்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாஓவின் போதனை

இது ஒரு மகிழ்ச்சிமிக்க பிரதிபலிப்பு. எனினும், ஒரு பிரச்சினை தீர்க்கப்படாமலே இருக்கிறது. தொழிலாளர்கள் எவ்வளவுதான் புரட்சிகர உணர்வுள்ளவர்களாகவும், வீரமுள்ளவர்களாகவும் இருந்தபோதிலும், பொலிஸும், ராணுவமும், ஆயுதங்களைத் தாங்கி இருப்பதால், அவர்களிலும் பார்க்க பலமற்றவர்களாகவே இருக்கிறார்கள். இதுபோன்ற நிலைகளில் தொழிலாளர்கள் செய்ய வேண்டியதென்ன? பயங்கொள்ளித்தனமாக சரணடைவதா அல்லது எதிர்த்துப் போராடுவதற்கு வழிவகை தேடுவதா?

தோழர் மாசேதுங் இக் கேள்விகளுக்கு சரியான விடை அளித்துள்ளார். அவர் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் போதித்ததாவது: உங்கள் எதிரிகள் கைகளில் வாளேந்தியுள்ளனர்; உங்கள் தலைகளை வெட்டுவதே அவர்கள் நோக்கம்; அவர்களை எதிர்த்துப் போராடுவதாயிருந்தால் நீங்களும் வாளேந்துவது அவசியம்; இல்லையேல் அவர்களை வெல்ல முடியாது. இந்த சுலபமான ஆனால், ஆழ்ந்த கருத்திலிருந்துதான் மக்கள் சேனையின் அவசியம் பற்றிய தத்துவத்தை உருவாக்கினார். ''மக்கள் சேனை ஒன்றில்லையேல் மக்களுக்கு ஒன்றுமே இல்லை'' என்று தோழர் மாஓ குறிப்பிட்ட உண்மையை இதற்கு முன் எவருமே குறிப்பிட்டதில்லை.

இலங்கையின் புரட்சிகர இயக்கம் இன்றோ நாளையோ விரைவில் ஓர் மக்கள் சேனையை அமைக்கவே செய்யும். ஆனால், அதற்கிடையில் பொலிஸினதும், ராணுவத்தினதும் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் வழி வகைகள் காணவேண்டும். இங்கு நாம் உங்களுக்கு கட்டளைகள் தரமுடியாது. ஆனால், தோழர்கள் விஷயத்தைக் கிரகித்துக்கொள்ள முடியும் ''நீந்துவதன் மூலம் நீந்தலை நீங்கள் பயிலுகிறீர்கள், புரட்சி செய்யும் பொழுதுதான் புரட்சி செய்யப் பழகுகிறீர்கள். முதலில் பயில்வது, பின் செயல்படுவது என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. ஏனெனில், செயல்படுவதுதான் படிப்பதும்'' என்று தோழர் மாசேதுங் போதித்திருக்கிறார்.

## அடக்குமுறை இயந்திரத்தில் மாற்றமேற்படவில்லை

''ஆயுதத்தைப் பிரயோகிக்க பயிற்றப்படாத, ஆயுதத்தைத் தேடிக்கொள்ள முடியாத அடக்கப்படும் வர்க்கம் அடிமையாக கருதப்படுவதற்கே தகுதியானது'' என தோழர் லெனின் போதித்திருக்கிறார். இப் போதனைகளிலிருந்து சரியான பாடங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமாவோ-என்.எம். பெரேரா-அசீஸ்-கெனமன் ஆகியோர் தலைமையிலுள்ள இரக்கமற்ற பொலிஸ் மிருகத்தனமாக எமது இரு தொழிலாளத் தோழர்களை சுட்டுவீழ்த்தியது. சரியான முறையில் மரணச் சடங்குகள் செய்வதற்குக்கூட அவர்களின் சடலங்கள் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இன்னொரு போராட்டத்தின்போது இது போன்ற ஆத்திரமூட்டும் செயலில் பொலிஸ் ஈடுபட்டால் நாம் என்ன செய்வது?

பாராளுமன்றத்துக்குள்ளே ஆடப்படும் சங்கீதக் கதிரை விளையாட்டில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் அடக்குமுறை பொலிஸ் படையில் ஏதும் மாற்றம் ஏற்படவில்லை என்பதையும், அப்பொலிஸ் படை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தோட்டத்துரை சமர்வில்லின் நலன்களுக்காகவே செயல்பட்டது என்பதையும், கீனுகலையில் நடைபெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம், அடிக்கடி நாம் கூறும் எமது தத்துவத்தை சந்தேகத்திற்கிடமின்றி சரியென நிரூபித்துவிட்டது. அது மட்டுமல்ல.

இது போன்ற இன்னொரு நிலையை நாம் எதிர்நோக்க வேண்டியிருந்தால், நாம் மேலும் தயார் நிலையில் இருக்க வேண்டும். வீரமிக்க வியட்நாமிய விவசாயிகள், மிகப் பலம் வாய்ந்த விரோதியை எவ்விதம் தோற்கடிக்க வேண்டும் என்பதைப் பற்றி நிரூபித்த பாடங்களை நாம் கற்று எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு பொலிஸ்காரனின் உதவிக்கு மற்றொரு பொலிஸ்காரன் எவ்விதம் விரைந்து செல்கிறான் என்பதைக் கவனியுங்கள். ஒரு இடத்தில் ஒரு பொலிஸ்படை பலமற்றதாயிருந்தால் அதைப் பலப்படுத்துவதற்கு வேறு இடத்திலிருந்து பொலிஸ்படை கொண்டு வரப்படுகிறது. பொலிஸ் படையின் பலமும் போதவில்லை என்றால், ராணுவமும் அழைக்கப்படுகிறது. எமது எதிரியிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு தொழிலாளி எதிரியினால் தாக்கப்பட்டால் அவனைப் பாதுகாக்க மற்றுமுள்ள தொழிலாளர்கள் விரைந்து செல்ல வேண்டும். தமது உதவியை பல பக்கங்களிலிருந்தும் திரட்டிச் செல்ல வேண்டும். உண்மையில் நாம் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள்; எதிரி எம்மிலும் பார்க்க எண்ணிக்கையில் கூடியவனல்ல. அவர்களிடம் நல்ல ஆயுதங்கள் மட்டுமே உள்ளன; அது அவர்களின் தற்காலிக உயர்ச்சியே. நாம் சரியான வழிமுறைகளைக் கையாண்டால் இந்த நிலையை எமக்குச் சாதகமாகத் திருப்ப முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடதாசிப் புலிகளே

பிற்போக்குவாதிகளும் அவர்களது ஆயுதப் படைகளும் கடதாசிப் புலிகளே என்பதை நினைவில் நிறுத்திக்கொள்வோமாக. ஒரு கிராமப்புறம் (தோட்டப் பிரதேசம் உட்பட) எமக்கு அளிக்கக் கூடிய நன்மைகளான வசதியற்ற போக்குவரத்து தொடர்புகள், சீர்கெட்ட ரோடுகள் ஆகியவற்றை எமது நலன்களுக்காகப் பலப்படுத்தி சரியான செயல் தந்திரமான ''எதிரியை எமது மத்தியில் வரச் செய்யுங்கள்'' என்பதைக் கடைப்பிடித்தால் மக்களே இறுதியில் வெல்வர். எங்களுடைய பாதையில் எமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். தியாகம் செய்வதற்கு தயாராகவும், வெற்றியை வென்றெடுப்பதற்கு உறுதியும் எமக்குத் தேவை. தோழர் மாசேதுங்கின் அழைப்பின் வழி செல்வோமாக. ''தியாகத்திற்கு அஞ்சாது, இறுதி வெற்றியை வென்றெடுக்க சகல கஷ்டங்களையும் தாண்டிச் செல்லுங்கள்.''

எமது ஊழியர்களிலும், தொழிலாளர்களிலும் பலர் கராட்டி, ஜூடோ மற்றும் தற்பாதுகாப்பு முறைகளைப் பயிலுகிறார்கள். இது நன்று. எமது ஒவ்வொரு இளம் தோழர்களும் திறமையாளர்களாகத் திகழவேண்டும். அவர்கள் இன்னும் முன்னேறி வேறுவிதமான பயிற்சிகளையும் பயில வேண்டும். மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனை என்ற புரட்சிகர தத்துவத்தினால் எமது தோழர்களை தத்துவார்த்தரீதியில் ஆயுதபாணிகளாக ஆக்கிவிட்டால் அவர்கள் மிகுதியைக் கவனித்துக்கொள்வார்கள். அநேகமாக நாம் போகும் வேகத்திலும் பார்க்க அவர்கள் வேகமாகச் செல்வார்கள்.

ஆகவே, எமது தோழர்களிடம் பெரும் பொறுப்புக்கள் தங்கியிருக்கின்றன. தமது நடவடிக்கைகளை வெறுமனே பொருளாதாரப் போராட்டங்களுக்குள் கட்டுப்படுத்திக்கொள்ளாமல் இருக்கவும், தொழிற் சங்க வேலைகளில் மட்டுமே ஈடுபடாமல் இருக்கவும் நாம் எமது தோழர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதும் அரசியலை முதன்மைப் படுத்த வேண்டும். ஒவ்வொரு தொழிற் சங்க அலுவலகமும் மாசேதுங் சிந்தனையைப் பரப்பும் பாசறைகளாக்கப்படவேண்டும்.

வருங்காலங்களில் பொருளாதார குழப்பநிலை அதிகமாகி ஒரு தோல்வியிலிருந்து மற்றொரு தோல்விக்கு உள்ளாகி இந்த அரசாங்கம் ஆட்டம் காணும்போது; விலைகள் உயர்வதும், சம்பளத்தின் உண்மைப் பெறுமதி வீழ்ச்சியடைவதும், அதன் காரணமாக பொருளாதார அமைதியின்மை, பலாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார உருவங்கள் எடுத்து பலவிதமான போராட்டங்களாக பரிணமிப்பதையும் எந்த சக்தியினுலும் தடுத்து நிறுத்த முடியாது. அதிகாரம் யு. என். பி. கையில் மீண்டும் திரும்பிவிடாமல் இருப்பதற்காக அல்லது சமாதான வழிகளின் மூலம் பாராளுமன்றத்திற்குள் நடைபெறும் மற்றுமொரு சங்கீதக் கதிரை விளையாட்டின் மூலம் யு. என். பி யை அதிகாரத்துக்குக் கொண்டுவரும் முயற்சியைத் தடுப்பதற்காக, இந்த இயக்கத்தின் முன்னணியில் நாம் நின்று அதற்கு சரியான தலைமையும் கொடுக்க வேண்டும்.

எமது சம்மேளனத்தின் மற்றப் போராட்டங்களை விவரமாக இங்கு குறிப்பிடுவது சாத்தியமல்ல. இந்த அறிக்கை இப்பொழுதே நீண்டுவிட்டது. ஆகவே, நாம் சில சுருக்கமான குறிப்புகளை மட்டும் இங்கு தருகிறோம். கடந்த வருடத்தில், எம்முடன் இணைந்த துறைமுகத் தொழிலாளர்களினதும், மற்றோரினதும் வேலைநிறுத்தம் ஒன்று துறைமுகத்தில் நடைபெற்றது. துறைமுகத்திலுள்ள சமசமாஜக் கட்சியின் தொழிற் சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்தின்போது கருங்காலிகளாகச்செயல்பட்டதும், அதன் விளைவாக சமசமாஜக் கட்சியின் தலைமைப் பீடம் தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள்ளே இருந்துகொண்டு வகிக்கும் துரோகத்தனமான கேடுகெட்ட பாத்திரம் அம்பலமாகியது. ஓய்வுபெறும் காலத்தில் துறைமுகத் தொழிலாளர்களுக்கு மாதாந்த ஓய்வுகால பணம் என்ற முக்கிய கோரிக்கையையும், மற்றும் பல கோரிக்கைகளையும் இந்த வேலைநிறுத்தம் வென்றெடுத்தது. இதில் பல முக்கியமான பாடங்களையும் நாம் கற்றுக்கொண்டோம். இந்த வேலைநிறுத்தத்தை நடத்துவதற்காக உருவாக்கப்பட்ட தொழிற் சங்க ஐக்கிய முன்னணியில்கூட எமது சங்கம் தனது சுதந்திரத்தை நிலைநாட்டியதோடு, ஐக்கியம் என்ற சுலோகத்தின் கீழ் பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட மற்ற சக்திகளினுல் மூழ்கடிக்கப்படாமல் இருந்ததும் நாம் கற்ற பாடமாகும்.

மீன்பிடிக் கூட்டுத்தாபன வேலைநிறுத்தத்தில் இ. தொ. ச. ச நேரடியாக ஈடுபட்டிராத போதிலும் இ. தொ. ச. ச. தனது மனப்பூர்வமான ஆதரவை நல்கியது. வேலை நிறுத்தத்தின் முடிவு யாவரும் அறிந்ததே. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் தவறற்றவர்களென நிரூபிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் ஆட்சி பீடமேறிய பின் இ. போ. ச. கடைப்பிடித்து வருகின்ற தொழிற் சங்க விரோத நடவடிக்கைகளைப் பற்றி நாம் சில வார்த்தைகள் கூறுமல் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அடிப்படையில் தொழிலாளர்களைப் பழிவாங்கியது யு. என். பி. அரசாங்கம் என்று குற்றஞ் சாட்டிவிட்டு, கூட்டு முன்னணி அரசாங்கமும் அதே பாதையில் நடக்க ஆரம்பித்துள்ளது. தேர்தலில் கூட்டு முன்னணியை ஆதரிக்காதவர்களுக்கு எதிராக பெருமளவில் பழிவாங்கல் நடைபெற்றது. இந் நடவடிக்கை யு.என்.பி. ஆதரவாளர்களுக்கு எதிராக மட்டுமே மேற்கொள்ளப்படவில்லை.

## அடிபணிய மாட்டோம்

எம்முடன் இணைந்துள்ள இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. செக்ரோலிலிருந்து சந்தாவைப் பிடிப்பது போன்ற சலுகைகள் அனைத்தும்-யு. என். பி. ஆட்சிக் காலத்திலும் கூட அது அனுபவித்து வந்த சலுகைகள்-அதற்கு மறுக்கப்பட்டன. எமது தொழிலாளர்களில் பலர் இன்னும் பழிவாங்கப்பட்டு நிற்கின்றனர். இ.போ.ச. வின் பணத்தையும், சொத்துக்களையும் முறைதவறி உபயோகித்தார் என்று கமிஷன் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்ட இ.போ.ச. தலைவரினதும், அல்லது அவருடைய சமசமாஜ அமைச்சரினதும் சர்வாதிகார, தொழிலாளர் வர்க்க விரோதக் கொள்கைகளுக்கு நாம் அடிபணிய மாட்டோம். இ. போ. ச. வில் பழிவாங்கப்பட்டவர்கள் எல்லோருமே எமது உறுப்பினர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு எமது ஆதரவு உண்டு. இ. போ. ச. வில் பழிவாங்கலுக்கு இலக்கானோரின் சார்பில் போராட நாம் சம்மதித்துள்ளோம்.

மீன்பிடிக் கூட்டுத்தாபனமும் பெருமளவு தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தது. முன்னைய யு. என். பி. அரசாங்கம் செய்த பாவங்களுக்காகத் தொழிலாளர்கள் பலியாக வேண்டியேற்பட்டது. தனியார் துறையிலும் கூட வேலை நீக்கம் செய்தல் பெருமளவில் நடைபெற ஆரம்பித்துள்ளது. சட்டத்தின் மூலமாகப் பரிகாரம் காணுவோம் என்று அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது. ஆனால், இன்றுவரை ஒன்றுமே நடக்கவில்லை.

இது வரப்போகும் விஷயங்களுக்கு முக்கிய அறிகுறியாகும். நாம்ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளவாறு, தலைமைதாங்க எமக்கு சவால் வரும்பொழுது அதனை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருத்தல் வேண்டும். இதனைச் செய்ய நாம் எமது உறுப்பினர்கள் அனைவரையும் அரசியல்மயப்படுத்துவதுடன் எமது சங்கங்கள் யாவும் அரசியலை முதன்மைப்படுத்தச் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான எதிரிகள்

அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம் ஆகியனவே தனது பிரதான எதிரிகள் என தொழிலாளர் வர்க்கம் அடையாளங் கண்டுகொள்ள நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். ஐக்கியப்படுத்தக் கூடிய சகல சக்திகளையும் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ் ஐக்கியப்படுத்துவதன் மூலம் பிரதான எதிரியை தனிமைப்படுத்துவதுதான் எமது செயல் தந்திரமாக இருக்க வேண்டும் என்றும் நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். தொழிலாளர் வர்க்கம் தனது எதிரிகளை இறுதியாகத் தூக்கியெறிய வேண்டுமேயானால், அது பூர்ஷுவா பாராளுமன்ற ஜனநாயகம் என்ற மோசடியை நிராகரிக்கவும், புரட்சிப் பாதையைத் தெரிவு செய்யவும் நாம் தொழிலாளர் வர்க்கத்திற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பூர்ஷுவா பாராளுமன்றத் தேர்தல்கள் என்ற மோசடியிலிருந்து அவர்கள் பூரணமாகத் தம்மை அப்புறப்படுத்திக் கொண்டால் மாத்திரமே இதனைச் செய்ய முடியும். அதனால்தான், பாராளுமன்றவாதம் என்ற மோசடி சம்பந்தப்பட்ட வரையில் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதுவே, இன்று ஒரு உண்மையான புரட்சிவாதியைத் தெரிவுசெய்யும் உரைகல்லாகும். பாராளுமன்றத்திலிருந்து தம்மைப் பூரணமாக அப்புறப்படுத்திக் கொள்ளாமல், அதனை பரிபூரணமாக நிராகரிக்காமல், புரட்சிவாதியாக இருப்பது அசாத்தியமான காரியமாகும்; அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யு. என். பி. யின் தலைமையிலுள்ள உள்ளூர் பிற்போக்கு சக்திகள் ஆகியவற்றைப் பலாத்காரமாகத் தூக்கி எறியும் பாதையில் - அவர்களின் அரசு இயந்திரத்தைப் பலாத்காரமாகத் தகர்த்தெறிந்துவிட்டு தொழிலாளர் வர்க்க அரசு இயந்திரத்தை அதனிடத்தில் நிறுவும் பாதையில் - தொழிலாளர் விவசாயிகளின் ஐக்கியத்தையும், புரட்சிகரப் புத்திஜீவிகளுடனான ஐக்கியத்தையும் அடிப்படையாகக் கொண்ட, தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலான அரசாங்கமொன்றை ஸ்தாபிக்கும் பாதையில்— புரட்சிகரப் பாதையில் அடியெடுத்து வைப்பது அசாத்தியமான காரியமாகும்.

மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனை எனும் புரட்சிகரத் தத்துவ ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட இப் புரட்சிகரத் தெளிவுடன் ஆயுதபாணிகளாக நாம் இம் மாநாடு முடிந்து செல்லும் வேளையில் புதிய சக்திபெற்று, உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் அனைவரதும் விடுதலை இலட்சியத்துக்கு, விமோசன இலட்சியத்துக்கு எம்மை மீண்டும் அர்ப்பணிப்போமாக.

•

*இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் நீடூழி வாழ்க!*

*மார்க்சிஸம் — லெனினிஸம் — மாசேதுங் சிந்தனை நீடூழி வாழ்க!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERMANENT REFERENCE

FOR USE IN THE
LIBRARY ONLY

317472

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ලංකා විශ්ව විද්‍යාලය
පුස්තකාලය
1976 සැප - 7
පේරාදෙණිය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இலங்கை பாட்டாளி வர்க்கத்தின் ஒரேயொரு புரட்சிக் குரல்;

* மார்க்சிஸம் — லெனினிஸம் — மாசேதுங் சிந்தனைப் பதாகையை உயர்த்தும்;

# "தொழிலாளி"

வாரப் பத்திரிகை

**தவருது படியுங்கள்! போர்ப்பரணி முழக்குங்கள்!**

விலை 15 சதம்

123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.


தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org